www.tamilarangam.net

சுமைகள்

சுமைகள் 20 வைகாசி, ஆனி 1997 Sumaihal Nr 21 May, June 97 Løssalg

# அகதிகளாக்கப்பட்ட மக்களின் அவலங்களுக்கு விடிவு எப்போ?

''வெற்றி நிச்சயம்'' தாக்குதலை அரசு தொடங்கி தன்வசம் வவுனியா முதல் புளியங்குளம் வரை கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்துள்ளது. இதை அரசு தரப்பில் புகழ்ந்து கூறும் தொலைத் தொடர்பு சாதனங்கள், அங்கு வாழ்ந்த அகதிகளை மறந்து விட்டனர். தாம் இராணுவத்தின் கையில் அகப்பட்டால் தமது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று நினைத்தும், புலிகளால் பலவந்தமாக தமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதாலும் சூரியக்கதிர் தாக்குதல்கள் மூலம் இடம் பெயர்ந்த மக்கள், இன்று எங்கு இடம் பெயர்வது செல்வது என்று நிலைக்கு தமது வாழ்க்கை கேள்விக் குறியாகி உள்ளதை நினைத்து கலங்குவதை அவதானிக்க முடிகின்றது.

சூரியக்கதிர் தாக்குதல்கள் மூலம் இராணுவத்தின் கையில் அகப்படாது தமது நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்ட மக்கள். இக்காலத்தில் அவர்கள் தமது வாழ்க்கையில் நினைத்திருக்க முடியாத அளவிற்கு துயரங்களை அனுபவித்து வந்துள்ளனர். உண்ண உணவு, உடுக்க உடை, உறங்க உறையுள் என்ற மூன்றும் மனிதனின் உயிர் வாழ்விற்கு அடிப்படையான விடயங்களாகும். இவற்றில் எதுவுமே சரிவரக் கிடைக்காமல் கடந்து சில ஆண்டுகளாக வாழ்ந்த வந்த மக்கள் அனுபவித்த துன்பங்களை எழுத்தில் எழுதி அதை உணர வைக்க முடியாது.

புலம் பெயர்ந்த இவர்கள் தங்குவதற்கு வதிவிட பற்றாக் குறையினால் வாசிகசாலைகளிலும், பாடசாலைகளிலும் தங்கினர். அங்கு பல குடும்பங்கள் தங்கியதால் எல்லோருக்கும் சரியான இடவசதி கிடைக்கவில்லை. ஒரு சிறு இடத்தை ஒரு குடும்பத்துக்கு என பிரித்துக் கொடுத்தனர் ஆனால் ஒரு குடும்பத்தில் பலர் அங்கத்தவர்களாக இருந்த போதிலும் அச்சிறு இடத்தை சமாளிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர். மலசலகூடங்கள் தண்ணீர் வசதி என்பன அற்றநிலையிலேயே அப்பிரதேசங்கள் காணப்பட்டன. சிறுசிறு தண்ணீர் தேக்கங்களில் மக்கள் தண்ணீரை எடுத்துப் பருகினர். இதன் விளைவு பலர் வாழ்க்கை முழுவதும் மாற்ற முடியாத நோயைச் சம்பாதித்துக் கொண்டனர். பலருக்கு மலேரியாக் காச்சல், அதைவிட மூன்று நாட் காச்சல் என அழைத்தனர். அக்காச்சல் வந்த மூன்றாம் நாளே காச்சல் வந்தவர் மடிந்தார், ஈரல் வீக்கம், ....... எனப் பல நோய்கள் தாக்கியது இவற்றை மாற்ற மறுந்து வசதியோ அங்கு இல்லை பணம் கையில் அற்றவர்கள் தம்மால் முடிந்து கைமருந்துகளைக் கொடுத்து நோய் வாய்ப்பட்ட வர்களை காப்பற்ற முற்பட்டனர். அவ்நோய்களோ உடல் பலவீனம் அடைந்திருந்ததினால் மக்களை அழித்தது. இதைக்கண்டு பீதிய டைந்த பலர் இராணுவத்தின் பிடியிலுள்ள பகுதிகளுக்கு

## தமிழீழ ஆதரவில்

# இன்றைய நமது கடமை என்ன ..... ...?

தமிழீழ ஆதரவு நெஞ்சங்களே

கடந்த 15 ஆண்டுகளாக தமிழீழ விடுதலைப் போராட்டம் படிப்படியாக பற்றிப்படர்ந்து கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றது. இலங்கை அரசின் சிங்கள இனவெறி, தமிழின அழிப்பு யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கானவர் உயிரிழந்து உடமை இழந்து தங்கள் சொந்த நாட்டிலும், அந்நிய நாட்டிலும் இலட்சக் கணக்கானோர் அகதிகளாக அலைகழிக்கப்பட்டு வருகின்றனர்.

இன்று தமிழீழ விடுதலைப் போராட்டம் மிகவும் சிக்காலான ஒரு திருப்பு முனையில் உள்ளது. தமிழகத்திலும், கர்நாடகத்திலும் ஏன் உலகில் பல நாடுகளிலும் உள்ள தமிழின விடுதலை உணர்வாளர்கள், ஆதரவாளர்கள் இந்த சரித்திரப் புகழ்பெற்ற விடுதலைப் போருக்கு பல்வேறு கட்டங்களிலும் பல்வேறு நிலைகளில் இருந்து துணைநின்று வருகின்றனர். 1980 களில் இயக்கப் போராளிகளுக்கும், அல்லலுறும் அகதிகளுக்கும் பரவலாக நிதி திரட்டல், உணவு, உடை, மருந்துகள் சேகரித்துக் கொடுத்தல், பேரணிகள், பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், கருத்துப் பிரச்சாரங்கள் இப்படி பல்வேறு நிலைகளிலும் உணர்வு பூர்வமாக நமது ஆதரவை வெளிப்படுத்தினோம். இன்று கூட தொடர்ந்து செய்து வருகின்றோம்.

இன்று இந்த இனவிடுதலைப் போருக்கு ஆதரவாக செயல்பட்டு வரும் தமிழ் இன உணவாளர்களான, ஆதரவளர்களான நாம் மேலும் சிலவற்றை கூடுதலாக சிந்திக்க வேண்டிய, செயலாற்ற வேண்டிய நிலையில் உள்ளளோம். அதாவது தமிழீழத்திலும், தமிழ் நாட்டிலும் விடுதலைப் போராட்ட இயக்க செயல்பாடுகள் ஒரு புறம், அந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக உலகத்தின் அனைத்து மூலைகளிலும் குறிப்பாக தமிழகத்திலும், கர்நாடகத்திலுமான ஆதரவு இயக்கங்கள் மறுபுறம்.

தமிழீழ விடுதலைப் போராட்டங்களின் வெற்றி தோல்விகளை, செய்திகளை நெஞ்சார்ந்து உணர்வுடன், தமதாக்கிக் கொண்டு கருத்துப் பரப்பல்களில் ஈடுபட்டு செயல்பா டுகளில், போராட்டங்களில், ஆதரவு நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியதாகும். ஆனால் அந்த வரலாற்றுக் கடமை இன்று இன்னும் சில குறிப்பான

9ம் பக்கம் பார்க்க

Sumaihal - post Boks 10, 5125 Bovågen NORWAY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தப்பிவந்தனர். எவ்வாறு புலிகளால் பாஸ் கொடுக்கப்பட்டது என எல்லோரும் கேட்கலாம். ஆனால் புலிகள் இடவசதி அற்றவர்களுக்கு பாஸ் கொடுத்தனர்.

கஷ்டங்களை அனுபவித்த மக்கள் தாம் என்றாவது, தாம் முன்பு வாழ்ந்த வாழ்க்கை கிடைக்கும் என பலர் தமக்குள் கதைத்து மனதைத் தேற்றிக் கொண்டர். உணவு ப்பொருட்கள் பெற்றுக் கொள்வது என்பது மிகுந்த கஸ்டமான விடயமாக்கப்பட்டது. அதேவேளை காட்டுப் பகுதிகளில் மக்கள் வாழ்ந்ததால் சிலர் பாம்பு கடித்த மரணத்தைத் தழுவினர். இவ்வாறு தமது நாட்டிலேயே அகதிகளாக்க ப்பட்ட மக்கள் மேலும் பல துயரங்களை அனுபவித்து வந்தனர்

''துள்ளித் திரியும் வயதில் துடுக்கை அடக்கிப் பள்ளிக்கு அனுப்பிவை க்காப் பாதகனே'' என்று முன்பு தமக்குப் படிப்பிக்காத பெற்றோ ரைப் பார்த்து பிள்ளைகள் கேட்டனர் என சிறு வயதில் இருந்தே பாடசாலைகளில் கற்பிக்க ப்பட்டது. இவ்வாக்கியத்தை மனதில் நிறுத்திய பெற்றோர்கள் தமது பிள்ளைகளை எந்த யுத்தம் நடந்தாலும் பாடசாலைக்கு அனுப்பவேண்டும் என்ற நோக்குடன் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பினர். இவர்கள் படிக்கச் சென்ற தூரமே ஒரு கிலோமிற்றர் அல்லது இரண்டு கிலோமிற்றர்கள் அல்ல. 10 கிலோமிற்றர்வரை சென்று படிக்கத் தொடங்கினர் அச்சின்ன ஞ்சிறார்கள். இவர்கள் நாளந்தம் சென்றுவரும் பாதையோ உயிருக்கு உத்தரவாதம் அற்றதாகக் காணப்பட்டது. ஏன் பலர் பாடசாலைக்கு எனச் சென்றவர்கள் தான் இன்று வரை திரும்பவில்லை காரணம் இராணுவத்தின் செல்தாக்குதல், விமானக் குண்டு வீச்சுகளில் சாகடிக்கப்பட்டனர். இந்நிலையிருந்தும் மக்கள் இராணுவத்தின் கையில் பிடிபடாமல் புலிகளின் கட்டுப்பாட்டினுள் வாழ்ந்தமைக்கு பலகாரணங்கள் உண்டு. இராணுவம் என்றுமே தமிழ் மக்களை (சாதாரன மக்களை) புலிகள் என்ற போர்வையில் அழித்தொழித்தது, பெண்கள் என்றால் பாலியல் பலாத்தாரத்தை செய்தது, உடமைகள் களவாடப்பட்டது, ......... போன்ற அயோக்கிய அடாவடித்தனங்களை மாறிமாறிச் செய்த இராணுவத்தை மக்கள் என்றுமே நம்பமுடியாது. அதைவிட ஒரு இனவாதக் கருத்தின் மேல் உருவாக்கப்பட்ட இராணுவம் என்பதையும் மக்கள் ஏற்கனவே புரிந்தவர்கள் தானே என்பது ஒரு புறம் இருக்க, புலிகளுக்கு உதவி புரிந்தமைக்காக யாழ்பாணத்தில் காட்டிக் கொடுக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்படும் நிகழ்சிகளை அறிந்தனர், இவற்றை விட புலிகள் பாஸ் கொடுக்க மறுப்பு என பலகாரணங்களால் இராணுவத்தின் கையில் அகப்படடாமல் வாழ்ந்தனர்.

இவ்வாறு துன்ப துயரங்களை அனுபவித்து வந்து மக்கள் இன்று வெற்றி நிச்சயம் என்ற தாக்குதலின் மூலம் சிதறடிக்கப்ப ட்டுள்ளனர். செல்தாக்குதல்களும், விமானக் குண்டு வீச்சுக்களும் மாறிமாறி நடப்பதால் மக்கள் தமது உயிரைக்கையில் பிடித்தபடி சிறுவர்களை இடுப்பில் சுமந்தபடி காடுகளை நோக்கி ஒடுகின்றனர். இவ்வாறு அவஸ்தைக்குள்ளாகும் மக்களை பற்றி இன்று உலகநாடுகளோ அல்லது தொலைத்தொடர்பு சாதனங்களோ கவனத்தில் கொள்ளவில்லை. புளியங்குளம் வரை இராணுவம் சென்று விட்டது என் அறிவிக்கும் அரசு. இங்கு வாழ்ந்த மக்கள் என்னநிலைக்குத் தள்ளப்பட்டனர் என் அறிவிப்பதில்லை. மாறாக புலிகளோ தமது தாங்குதல்களை மறைந்து நின்று தாக்குவதற்காக மக்கள் செறிவாக இருக்கும் பகுதிகளில் நின்று தாக்குகின்றனர் அப்போது எதிரியோ இதுதான் தருனம் என பார்த்து அங்கு நிற்பவர்கள் எல்லோரும் புலிகள் என கூறியபடி அம்மக்கள் மீது குண்டுகளை வீசுகின்றான். அத்தோடு புலிகள் தாம் யுத்தத்தில் தாக்குப்பிடிக்க முடியாததை மறைப்பதற்காக தம்மால் பலவந்தமாக அகதிகளாக்கப்பட்ட மக்கள் இன்று இராணுவத்தின் நடவடிக்கையால் துன்பங்களை அனுபவிக்கின்றனர் என அறிக்கை விடுகின்றனர். இவ்வாறு இரு பகுதியினரும் தமது அரசியல் இலாபம் கருதி நகர்த்தும் பகடைக்காய்களாக அகதிகளாக்கப்பட்ட மக்களை பயன்படுத்துகின்ற இழிநிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையை தீர்க்க வேண்டும் எனின் இவ்யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறு யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமானால் இரு பகுதியினரும் பேச்சு வார்த்தை மேடைக்கு அழைக்கப்படல் வேண்டும். ஆரம்பிக்கப்படும் பேச்சுவா ர்த்தையில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை பேணும் வகையில் பேச்சு வார்த்தை முற்றுப்பெறவேண்டும் அப்போது மட்டுமே இந்நிலை அகற்றப்படும்.

கோபாலன்.

23.5.97

## சுமைகள் 2

1ம் பக்கத் தொடர்

மனிதனுக்கு ஒரு மாடும், 5 மனிதனுக்கு ஒரு ஆடும் 6 மனிதனுக்கு ஒரு பன்றியும், வேறு மிருகங்கள் என ஒரு வருடத்திற்கு உற்பத்தி ஆனது. பெற்றோலை எடுப்பின் ஒரு மனிதனுக்கு 576 லீற்றர் உற்பத்தியானது. சோளத்தை எடுப்பின் ஒருவனுக்கு 90 கிலோ உற்பத்தியானது. வாற்கோதுமை 25 கிலோ உற்பத்தியானது மீன் 19 கிலோ உற்பத்தியானது. உருளைக்கிழங்கு 50 கிலோ, அரிசி 97 கிலோ, சோயா 23 கிலோ, சீனி 27.1 கிலோ உற்பத்தியானது. இப்படி தனி நபர்களுக்கு ஒரு வருடத்திற்கு உற்பத்தியானவையே இவை இது மனித தேவைக்கு மிஞ்சியது. ஆனால் மக்கள் பஞ்சத்தில் இறக்கின்றனர் எனின் ஏன்?

இன்று மேற்கு நாட்டில் உள்ளவர்கள் தாம் இறைச்சி உண்ணவேண்டும் என்பதற்காக தீனியாக தானியத்தை மிருகங்களுக்கு கொடுக்கின்றனர். இதைத் தடுத்து நிறுத்தின் இன்று உள்ள உலகத் தானிய உற்பத்தியைக் கொண்டு உலகில் உள்ள இன்றைய சனத்தொகையைப் போல் ஆறு மடங்கு மக்களுக்கு உணவாக வழங்க முடியும். ஏன் ஆச்சரியமாக உள்ளதா? இது தான் உண்மை. உலக பஞ்சத்துக்கு காரணம் மேற்கு நாட்டவனே (பணக்காரனே) ஒழிய மூன்றாம் உலக ஏழையல்ல. மேற்கு நாட்டில் ஒருவன் பிறந்தால் அவன் ஏழை நாட்டில் உள்ள பலரை பஞ்சத்திற்கு உள்ளாக்கிறான்.

மற்றொரு புறம் உணவு, மற்றம் உற்பத்திகளை கடலிலும், நிலத்திலும் அழிப்பது தொடர்கிறது. தமது பொருளைக் கூடிய விலையில் விற்க தட்டுப்பாட்டை ஏற்படுத்த மிகப் பெரிய அளவில் பொருளை அழிக்கின்றனர்.

இன்னும் ஒரு நடைமுறை உதாரணத்தைப் பார்ப்போம். பிரான்சில் உள்ள மொத்த நாயின் எண்ணிக்கை 76 லட்சம், பூனையின் எண்ணிக்கை 82 லட்சம் ஒரு நாயின் வருடச் செலவு 780 டொலர் ஒரு பூனையின் செலவு 596 டொலர்களாகும். இப்படி செலவில் மேற்கு நாடுகளிலும், மூன்றாம் உலக பணக்கார வீடுகளிலும் மட்டும் கிட்டத்தட்ட 25 கோடி ரூபாய்களாகும். 25 கோடி பூனைகளும் உலகில் உண்டு. அதாவது 60 கோடி நாய், பூனைகள் உள்ளது. அவற்றின் வருடச் செலவு 34,400கோடி டொலராகும். இவையே பணக்கார வீட்டு நாய், பூனைகளுக்கான உலக வரவு, செலவு தனியாக ஆகும். 34,400 கோடி தேசிய வருவாயை விட கூடுதலாக உலக வருமானம் பெறும்

7 பக்கம் பார்க்க

www.tamilarangam.net



8பக்கத் தொடர்

சிறையிலிடுவதன் மூலமோ போராட்ட இயக்கத்தை அழித்து விட்டோம் என பெருமிதம் கொள்ளலாம் ஆனால் அது வரலாற்றின் மூலம் பொய் என நிருபனமாகும். ஒரு தலைவரை அழித்து விடுவதன் மூலம் போராட்டத்தை ஒடுக்கிவிட்டதாகாது. ஏனெனில் அது ஒரு அரசியல் கருத்தைக் கொண்ட ஒரு இயக்கம் மீண்டும் துளிர்விட்டு முளைக்கும். இப்படிப்பட்ட ஈனஇரக்கமற்ற படுகொலைகளை ஏகாதிபத்தியங்கள் நடத்தி முடித்திருக்கின்றன. குறிப்பாக புகழ்பெற்ற சர்வதேசியவாதியும், கியுபாப் புரட்சி வீரரான சேகுவராவை உயிருடன் பிடித்த பின்னர் பல மணிநேரங்களின் பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உத்தரவின் பின்னர் சுட்டுக் கொண்றனர். சரணடைந்த போராளிகளை, உயிருடன் பிடிபட்டவர்களை கொல்வது இந்த முதலாளித்துவ சமூதாயத்தில் எதுவும் புதுமையானது அல்ல.

**பிரச்சாரத்திற்கு பலியாகல்.**

பேருநாட்டுப் போராளிகளை ஏகாதிபத்தியத்தின் எலும்புத் துண்டில் இருந்து பிழைப்பு நடத்தும் கைக்கூலிகளினால் படுகொலை செய்யப்பட்டதை எல்லோரும் அறிந்தனர். இந்தப் போராளிகளின் இழப்பிற்கு எத்தனையோ நெஞ்சங்கள் தமது மனதுக்குள்ளே அழுதனர். ஆனால் இந்த நெஞ்சங்கள் ஏன் அடக்கு முறையாளர்களின் கொலை வெறிக்காக வெளிப்படையாக ஏன் குரல் கொடுக்க முடியவில்லை என்பதையும் இங்கு ஆராயவேண்டியுள்ளது. ஏகாதிபத்தியங்களின் பிரச்சாரத்திற்கு பலியாவதும், நுகர்வு வேட்டை தழுவிய பிரச்சாரத்திற்கு பலியாவதும் வெறுமனே புதிதான விடயம் அல்ல. இது எப்பொழுதும் வீச்சாகத்தான் நடைபெறுகின்றது.

ஏகாதிபத்தியத்தன் பிரச்சாரத்திற்கு இசைவாக்கப்பட்டுள்ளமை. அதாவது கம்யூனிசம் தோற்றுப் போய்விட்டது முழு உலகமே பிரச்சாரத்தில் அடிமைப் பட்டிருந்த நிலை என்பது ஆழப்பதிந்துள்ளது. இதற்கு வெளிப்டையாக ஆதரவு தெரிவித்தால் சமூகத்தில் இருந்து அந்நியப்பட்டுப் போய்விடுவார்கள் என்ற சமூகப்பயம். இப்படியே உலகத்தின் மூலைமுடுக்கெல்லாம் பிரச்சாரத்திற்கு அடிமைப்பட்டிருந்த வேளை பேருநாட்டுப் போராளிகள் ( ஒளிரும் பாதையினர்) துனிந்து ஏகாதிபத்தியங்களின் பிரச்சாரத்திற்கு எதிராவும், முதலாளித்துவ பாதையாளரான டெங் சியாப் பிங் ( சீன) ஆகியோரிற்கு எதிராகவும், தமது எதிர்பை காட்டும் வகையிலும் இவர்களின் பெயரைக் கொண்ட சுலோக அட்டையை சுட்டுக் கொன்று நாயின் மீது அதனை தூக்கி மின்கம்பத்தில் கட்டித்தூக்கினர். இவ்வாறு ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தனர். பேருநாட்டைப் பொறுத்த வரையில் அதிதீவிரமானதாக காணப்படலாம். ஆனால் சர்வதேச ரீதியில் அதன் பாத்திரம் முக்கியத்துவம் வகித்தது. ஏனெனில் ஒரு முண்ணனிச் சக்தியானது போராடுகின்ற சக்திகளுக்கு தலைமைதாங்க வேண்டியது முக்கிய கடமையாகும். அதனையே இவர்கள் செய்தனர் எனினும் இவர்கள் முதன்மையான எதிரி மற்றும் அரைவழிக் கூட்டாளிகளை இனம் காணத்தவறி விட்டனர். ஒளிரும் பாதையினரும், துபாக் கமாறு போராளிகளும் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொன்றனர். இது ஒருபக்கம் இருக்க பழங்குடிகளையும் துன்புறுத்தினர். இவைகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் தளங்களை இழக்கவும் வேண்டி ஏற்பட்டது. போலிபிரச்சாரத்தை முறியடிக்க முற்போக்குச்சக்திகள் எவ்வகையான வேலை முறையைக் கையாள்கின்றனர் என்பதைக் அறிய வேண்டியது முக்கியகடமையாகின்றது.

இவர்களின் போராட்ட அனுபவத்தின் ஊடாகப். பெறும் படிப்பினைகள் விலை மதிக்க முடியாததாகும். இப்போராட்ட அனுபவங்கள் காட்டுவது என்னவெனில போராடும் ஒவ்வோரு குழுவும் மக்களைச் சார்ந்து நிற்க வேண்டும் என்பதேயாகும். அதற்காக வேண்டி புதிய அணுகுமுறை, நடை முறைகளை மாற்றிக் கொள்ள வேண்டியது புரட்சிகர சக்திகளின் கடமையாகும். இதன்பொருட்டு பரந்த விவாதத்தினை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலமே மிகப்பெரிய எதிரியை முறியடிக்கமுடியும்.

புதிய வழிமுறைகளையும் வந்தடையும் பொருட்டு பரந்த விவாதத்தை மேற்கொள்ளவேண்டும். இதன் மூலமே ஒரு சரியான கருத்தையும் வந்தடையமுடியும்.

மக்களுக்காக மரணித்த போராளிகளே நாடித்துடிப்பு அடங்கும்வரையிலும் ஏகாதிபத்திய கைக்கூலிகளுக்கு எதிராகப் போராடிய மனவலிமையும் உங்களிடம் இருந்து நாம் பெறும் விலைமதிக்க முடியாத படிப்பினையாகும். அனைத்துச் சக்திகளும் முன்மையான எதிரியார் என்பதைக் கணக்கில் எடுத்து பெற்ற வெற்றிகளை காப்பாற்றவும், தோல்விகளை மறு பரிசீலனை செய்து எங்கு எமது தவறுகள் இடம் பெற்றது என்தை ஆராய்ந்து திருத்தி போராட்டத்தை தொடர அனைத்து சக்திகளையும் ஒன்றுதிரட்டுவோம். ☐☐

## சுமைகளும் மக்களும்

இன்று உலகில் பலபாகங்களிலும் யுத்தம் நடைபெற்றக் கொண்டிருக்கின்றது. இதனால் பலலட்சம் மக்கள் தமது சொந்த நாடுகளிலேயும், அவ்வாடுகளை அண்டியுள்ள நாடுகளிலும், ஐரோப்பா, அமெரிக்க நாடுகளிற்கும் அகதிகளாக விரட்டி அடிக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு யார் காரணம் என்பதை ஆரயின் தமது சொந்த நலன்களுக்காக யுத்தம் நடத்தும் அரசுகளிற்குப் பின்னால் இருக்கும் முதலாளிகளே என்பதை புரிந்து கொள்ள முடியும். இவ்வாறு தமது சொந்த நலன்களில் நின்று மக்களை ஏமாற்றி பிழைப்பை நடத்தும் இவர்களையும், இவர்கள் சார்ந்த அரசுகளையும் இவ்வுலகத்திலிருந்து அகற்றி புதிய தொழிலாளர் நலன்களைக் கொண்ட அரசை உருவாக்க வேண்டின் அதற்கு தொழிலாளர்களும் ஒடுக்கப்பட்டுவர்களும் ஒன்று சேர்ந்து பேச்சுவார்த்தைக்கு இடமின்றி ஓர் ஆயுதத்தின் மூலம் தொழிலாளர் புரட்சியை மேற் கொள்ள வேண்டும். இதுவே உலகில் நிரந்தர சமாதனத்தையும், அகதிகள் அற்ற உலகத்தையும் உருவாக்கும்.

இதை அடிப்படையாக வைத்து இலங்கையை எடுத்து நோக்கு வோமாயின் அங்கும் இதேபோன்ற தொழிலாளர் நலனைக் கொண்ட அரசு உருவாக வேண்டின் தொழிலாளர்நலனைக் கொண்ட பாட்டாளி வர்க்கக் கட்சி உருவாக்கப்பட வேண்டும்.

என்பதை மனதில் கொண்டு புரட்சிகர கட்சியின் அவசியத்தையும், அதன் வரலாற்றுப் பணியையும் உணர்ந்தவர்கள் ஒன்றுபட்டு ஒரு புரட்சிகரக் கட்சியை உருவாக்குவது இன்றைய காலத்தின் கட்டாயமாக உள்ளது.

சுமைகளின் முகவரி:-
SUMAIHAL
POSTBOKS 10
5125 BØVÅGEN
NORWAY

*ஆக்கபூர்வமான விமர்சனங் களையும், ஆக்கங்களையும் உங்களிடம் இருந்து எதிபார்க்கிறோம்*

*தபாற் கணக்கிலக்கம்:– 0826 0868293*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்கட்டுரையானது இன்று சர்வதேச சூழலில் (உள்நாட்டிலும்) எவ்வகையான சக்தியை ஆதரிக்க வேண்டும் என்பது பற்றியும் பார்க்கப்படுகின்றது. போராட்டம் நடைபெறுகின்ற நாடுகளை கணக்கிலெடுத்து, எவ்வாறான நிலைப் பாட்டை எடுக்கவேண்டும் எனப்பார்க்கப்படுகின்றது. இவ்வகையில் இக்கட்டுரையானது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகின்றது. ஏனெனில் கடந்த கால வரலாற்றில் போராட்டங்கள் நிகழ்கின்ற நாடுகளில் சரியான ஆய்வின்றி போராட்டங்களை ஆதரித்த நிலையைக் காணமுடிந்தது. அந்தவேளை பிற்போக்கு இயக்கங்கள் நிபந்தனை இன்றி போராடுகின்றனர் என்பதற்காக முற்போக்குச் சக்திகள் தமது ஆதரவை வழங்கினர். இதற்கு நல்ல உதாரணமாக ஆப்கானிஸ்தானை கொள்ளமுடியும். ஆப்கானிஸ்தானில் இயங்கிய இயக்கங்களில் மார்க்சிய – லெனினிய அமைப்பும் ஒன்றாகும். அந்த இயக்கத்தை தெரிவு செய்து அதற்கு தகுந்த முக்கியத்துவம் கொடுக்காதது பெரும் வரலாற்றுத் தவறாகும். இதை ஏன் செய்யமுடியவில்லை என்பதையும் ஆய்வு செய்ய வேண்டியது தற்போதைய முக்கிய கடமையாகும். அதேவேளை தற்போது குர்திஸ்தானின் PKK இயக்கத்தினருக்கும் துருக்கிய பாசிச அரசிற்கும் இடையில் நடந்து வரும் யுத்தத்தைக் கருத்தில் கொண்டு குர்திஸ்தானிய மக்களின் போராட்டத்தை ஆதரிக்கும் வகையிலும், இன்ற இலங்கையில் தமிழ் மக்களின் விடிவிற்காக (சுயநிர்ணய உரிமைக்காக) போராடத் தொடங்கிய இயக்கங்கள் தற்போது ஒன்றை ஒன்று விழுங்கிக் கொள்வதையும் அவை தமது இருப்பை மட்டுமே தற்போதைய குறிக்கோள்களாகக் கொண்டுள்ளமையை கருத்தில் கொள்ளப்படவேண்டிய விடையமாகும். இவ்வாறனவற்றை ஆய்வுக்குட்படுத்தும் இக்கட்டுரை இக்கட்டுரையை தேசபக்தனில் இருந்து மறு பிரசுரம் செய்கிறோம்.

# சகோதர யுத்தம் தமிழீழத்தில் மட்டுமல்ல ......
# குர்திஷ்தான், ஆப்கானிஸ்தானிலும் கூட!




KURDISTAN

உலகில் இன்று நடக்கின்ற தேசிய விடுதலைப் போராட்டங்களில் குர்திஸ்தான் மக்களின் தேசிய இன விடுதலைப் போராட்டமும் முக்கியமான ஒன்று பிற தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் இருந்து இப் போராட்டம் ஒரு முக்கியமான வேறுபாட்டைக் கொண்டுள்ளது. காலனிய ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட நாடுகளில் எல்லைகள், அரசு வடிவங்கள் ஒரு வகை. காலனி எதிர்ப்பு தேசிய விடுதலைப் போராட்டங்களின் போது வல்லரசுகளும், அவற்றின் பிரித்தாளும் சூழ்ச்சியுடன் உடன்பட்ட உள்நாட்டு ஆளும் வர்க்கங்கள் கூட்டமாக உருவாகிக் கொண்ட நாடுகளின் எல்லைகள், அரசு வடிவங்கள் இன்னோருவகை.

ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள், உள்நாட்டு இன ஒடுக்கு முறை அரசுகளையும், ஆளும் வர்க்கத்தையும், வல்லரசுகளையும் எதிர்த்து நடாத்தப்படுகிறது. ஒரு நாட்டில் ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களை அணிதிரட்டி ஒடுக்கும் இனவாத அரசிற்கும், வல்லரசுகளுக்கும் எதிராகப் போராடி வருகின்றன. ஆனால் குர்திஷ்தான் தேசிய இனம் நான்கு நாட்டு அரசுகளின் கீழ் வாழ்கிறது. நான்கு நாடுகள் குர்திஷ்தானையும், அதன் மக்களான குர்திஷ் மக்களையும் துண்டாடி தத்தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன. இவ்வாறு துண்டாடப் பட்டுள்ள குர்திஷ் மக்களை அய்க்கியப் படுத்தி நான்கு நாட்டு அரசுகளுக்கும், வல்லரசுகளுக்கும் எதிராக ஏககாலத்தில் போராடி குர்திஷ்தானை தனி நாடாக விடுதலை பெறச் செய்வதையே அம் மக்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர். இதுவே மற்றைய தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் இருந்து குர்திஷ்தானுக்கான போராட்டத்தை வேறு படுத்திக் காட்டும் அம்சமாகும். மேலே உள்ள படத்தில் இதைத் தெளிவாகப் பார்க்க முடியும். கீழே உள்ள அட்டவணையும் இதைப் புலப்படுத்தும்.

| ஆக்கிரமித்த நாடுகள். | ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகள் | குர்திஷ் மக்களின் எண்ணிக்கை | மொத்த சனத்தொகையில் குர்திஷ்சின் விதாசாரம் |
|---|---|---|---|
| துருக்கி | மத்திய வடமேற்கு குர்திஷ்தான் | 20 மில்லியன் | 26.4% |
| ஈராக் | தெற்கு குர்திஷ்தான் | 4 மில்லியன் | 21.8% |
| ஈரான் | கிழக்கு குர்திஷ்தான் | 7 மில்லியன் | 12.7% |
| சிரியா | தென்மேற்கு குர்திஷ்தான் | 1.5 மில்லியன் | 12.7% |

அரசியல் – பண்பாட்டுத் துறைகளிலான தீவிர ஒடுக்கு முறையும் சுரண்டலும் அனைத்து நாட்டு குர்திஷ்தான் மக்களுக்கும் பொதுமைப்பட்டதாக இருந்து போதிலும் அந்தந்த நாட்டுக்குள் ஏற்றத் தாழ்வான தேசிய இன ஒடுக்குமுறை வடிவங்களின் ஊடாக அவற்றை குர்திஷ்தான் மக்கள் மீதான பொருளாதாரச் சுரண்டல் மற்றும் இன ஒடுக்கு முறைக்கு எதிராக பல இயக்கங்கள் போராடி வருகின்றன.

அந்தந்த நாட்டு மக்கள் இயக்கங்கள் தமது நாட்டில் உள்ள சிறுபான்மை குர்து தேசிய இன மக்களின் உரிமைக்காகவும் போராடிக் கொண்டிருப்பது ஒரு புறம், மறுபுறம் துன்டாடப் பட்டுள்ள குர்து இன மக்களை ஐக்கியப் படுத்தி குர்திஷ்தானை தனிநாடாக உருவாக்கும் குர்திஷ்தான் தேசிய விடுதலைப் போராட்டமும் அதனை முன்னேடுக்கும் குர்திஷ்தான் இன விடுதலை இயக்கங்களும் இன்னொர் புதிய பரிமாணம் பெற்றுள்ளது. குர்திஷ்தான் தனிநாட்டுக்கான போராட்டம் நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதாக உள்ளது.

www.tamilarangam.net



குர்திஷ்தான் மக்களின் அடக்கு முறையாளர்களான நான்கு நாட்டு அரசுகளும், அமெரிக்க தலைமையிலான ஏகாதிபத்தியங்களுக்கும் எதிராக பகிரங்க அறிவிப்புடன் குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி (PKK) யின் தலைமையின் கீழ் 1984 ஆவணி 15 இல் உருவாக்கப்பட்ட மக்கள் விடுதலை இராணுவம் (ARGK), தேச பக்த பெண்கள் அமைப்பு (YJWK), ERNK ஆகியனவும் போராடி வருகின்றன. நான்கு நாட்டு அரசுகள் தான் தமக்கு எதிரி, அந்நாட்டு மக்கள் நண்பர்கள் என்றும் உலக நாடுகளிலேயே தேசிய இன ஒடுக்குமுறை, சமூகப் பொருளாதாரச் சுரண்டல், ஏகாதிபத்தியங்கள் இவற்றிற்கு எதிராகப் போராடுகின்ற மக்கள் இயக்கங்கள் தமது நண்பர்கள் என்றும் PKK இன் தலைவரான அபோ அப்துல்லா ஒகலான் குறிப்பிட்டுள்ளார்.

ஈராக் ஆக்கிரமிப்பு தெற்கு குர்திஸ்தானில் இருந்த ARGKன் இரு இராணுவ முகாம்கள் மீது 20, 000பேர் கொண்ட துருக்கிய அரபசடை கவச வண்டிகள், பீரங்கிகள் சகிதம் 88 லும் 91 இலும் நடத்திய ஒடுக்கு முறை யுத்தம் குறிப்பிடத் தக்கது 1991 இல் ஈராக் குவைத் மீது நடத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்ததுடன் அமெரிக்கத் தலைமையிலான கூட்டணிப் படைகளும், ஈராக்கிற்கும் இடையில் நடந்து வளைகுடா யுத்தத்திலும் PKK யும், ERNKயும் எந்த நாட்டிற்கும் ஆதரவு அளிக்க வில்லை என்று 1991 யூனில் நடந்த சர்வதேச அளவிலான ''அணு ஆயுத எதிர்ப்பு, வல்லரசு எதிர்ப்பு கூட்டமைப்பு'' மாநாட்டில் அறிவித்தது கவனிக்கத் தக்கது.

இரு மாதங்களுக்கு முன் கிழக்கு குர்திஸ்தான் சனநாயக் கட்சி (KPD)க்கும், குர்திஸ்தான் தேச பக்த ஒன்றியத்திற்கும் (PUK) இடையில் நடந்து சகோத யுத்தம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது. 'மசூட் பர்ஷானி' என்பவர் தலைமையிலான KDP இயக்கம் தெற்குக் குர்திஷ்தானில் தான் பிரதானமாக நிலை கொண்டுள்ளது. ஈராக்கிய சார்பு நிலைப்பாட்டுடன் இயங்கி வருகின்றது. அதே போல் கிழக்குக் குர்திஷ்தானில் நிலைகொண்டுள்ள PUK 20 வருடங்களுக்கு முன் KPD யில் இருந்து பிளவு பட்டு வந்த இயக்கமே. இது ஈரானிய சார்பு நிலைப்பாட்டைக் கொண்டதாக உள்ளது. இதன் தலைவராக 'ஜலால் தலபானி' உள்ளார். KPDயும் PUK யும் துருக்கிய இனவாத ஒடுக்கு முறை அரசுடன் சுமுகமான உறவைப் பேணி வருகின்றனர். PUK இன் கட்டுப்பாட்டில் இருந்த தெற்கு குர்திஷ்தான் தலைநகரான இர்பிலை கைப்பற்றும் நோக்குடன் KDP இயக்கம் ஈராக்கின் 30, 000 ராணுவம், 450 கவச வண்டிகள், பீரங்கிகள் துணையுடன் யுத்தத்தில் ஈடுபட்டது. இர்பிலைத் தொடர்ந்து இரண்டாவது தலைநகரமான சுலைமானியாவையும் PUK யிடம் இருந்து கைப்பற்றிக் கொண்டது. இருந்தும் ஈரான் ஆதரவுடன் PUK யும் பதிலடி யுத்தத்தில் இறங்கியது. இர்பில், சுலைமானியா பகுதிகளுக்குள் ஈராக் இராணுவம் ஐ.நா தடைமீறி புகுந்ததன் விளைவாக வளைகுடா நெருக்கடி மீண்டும் ஏற்பட்டது. அமெரிக்கா ஈராக் மீது ஏவுகளைத் தாக்குதல் நடத்தியது. ஈரானின் வடக்கு, தெற்கில் ஈராக்கின் விமானங்கள் பறப்பதற்கு தடை விதிக்கப்பட்ட வடக்கு தெற்கு பகுதியின் அளவை இப்போது அமெரிக்கா மேலும் அதிகரித்துக் கொண்டது. இந்த வடக்குப் பகுதியில் தான் ஈராக்கிய ஆதரவு KPD க்கும், ஈரானிய ஆதரவு PUK க்கும் இடையில் ''சகோதர யுத்தம்'' நடந்தது.

ஈராக்கை அச்சுறுத்தும் நோக்கத்துடன் அமெரிக்கா மேற்கொண்ட தாக்குதல்களையும், படைக்குவிப்பையும் 22 நாடுகளின் கூட்டமைப்பான 'அரபு லீக்கும்', 'GEC' யும் மற்றும் உலக நாடுகள் பலவும் கண்டித்தன. அதே நேரம் ஈராக்கும் தனது இராணுவத்தை இர்பில் பகுதியில் இருந்து வாபஸ் பெற்றுக் கொண்டது. அப்பகுதிகளை KPD யின் கட்டுப்பாட்டில் விட்டது. குர்து தேசிய இன விடுதலைக்கான அம்மக்களின் போராட்டங்களையும், கடுமையான ஒடுக்கு முறை மூலம் தெற்குக் குர்திதானில் நசுக்கி வருகின்றது. அதே போல் அமெரிக்க வல்லரசும் துருக்கிய அரசும் குர்திஷ்தான் மக்கள் மேலான அடக்கு முறைகளை ஊக்கிவித்து வருகின்றது. இந்த நிலையில் அமெரிக்காவும் ஈராக்கும் குர்து மக்களின் நலன்களை முன்னிட்டே படை நடவடிக்கைகளை மேற்கொண்டதாக கூறுவது எவ்வளவு பெரிய மோசடி.

பனிப்போர் காலத்தில் அமெரிக்கா – ரஷ்ய மேல் நிலை வல்லரசுகளுடன் உடந்தையுடன் எட்டு ஆண்டுகளாக நடந்த ஈரான் – ஈராக் யுத்தமும், இன்றைய புதிய உலக ஒழுங்கமைவுகளின் கீழ் அமெரிக்க உலக ஆதிக்க வெறிக்கும், ஈராக்கின் பிராந்திய விரிவாதிக்க தலையெடுப்பிற்கும் இடையில் நடக்கும் அரசியல் – இராணுவ ரீதியிலான தீவிர வாத மோதலும் வளைகுடா நாடுகளில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

குர்திஷ்தான் மக்களின் தேசிய விடுதலைக்காகப் போராடுவதாக PUK யும், KDP யும் கூறிக் கொண்டாலும் அம்மக்களை அடக்கு முறை செய்கின்ற உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளைப் பற்றி தவறான பார்வையையே கொண்டுள்ளனர். அரசியல் முரண்பாடுகளை ஆயுத முனையில் தீர்த்துக் கொள்கின்ற இவ்விரு இயக்கங்களும் தனி இயக்க சர்வாதிகாரத்தை முன்னிறுத்துவதன் மூலம் போராடும் இயக்கங்களுக்கு இடையிலான அய்க்கியத்தை நிராகரிக்கின்றன. எதிரிக்கும் மக்களுக்கும் இடையிலான முதன்மையான முரண்பாட்டை பிரதானப்படுத்தாமல், இயக்கங்களுக்கு இடையிலான அகமுரண்பாட்டை முதன்மைப்படுத்தியதன் விளைவால் ஒருவரை ஒருவர் அழித்துக் கொள்ள எதிரியுடன் கூட்டுச்சேரும் கேடுகெட்ட நிலைக்கு வந்துள்ளனர். இவர்களின் முதலாளிய – குட்டி முதலாளியக் கொள்கை தான் ஈரானுக்கும், ஈராக்கிற்கும் தம்மை அடகு வைக்கவும், துருக்கியுடன் பேரம் பேசவும், அவர்களைத் தூண்டியுள்ளது. இதன் காரணமாக குர்திஷ்தான் மக்களின் விடுதலை சக்திகளாகத் தோன்றிய இவ்விரு இயக்கமும் இன்று அம் மக்களின் செல்லணா துன்ப துயரங்களுக்கு காரணமாகிப் போயுள்ளது. இவர்களின் இத்தகைய போக்குகளால் குர்திஷ்தான் மக்களின் போராட்டம் தவிர்க்க முடியாமல் பலவீனமடைகின்றது.

குர்திஷ்தான் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் நடக்கும் சகோதர யுத்தம் இப்படி இருக்கையில் மத்திய ஆசியாவைப் பார்த்தால் 1979 ல் ஆப்பானிஸ்தான் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பையும், பப்ரக் கர்மல், நாஜிபுல்லா தலைமையிலான பொம்மை அரசையும் எதிர்த்து நடந்த ஆப்கான் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் வரலாற்றில் முக்கியமானது. போராட்டத்தை முன்னேடுத்த இயக்கங்களில் குர்திஷ்தானின் PUK, KDP யைப் போன்ற முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ கண்ணோட்டம் கொண்ட இயக்கங்களும் இருந்தன. அதே வேளை மத அடிப்படை வாதம் கொண்ட இயக்கங்களும் இருந்தன.

ரஷ்யாவிற்கு எதிராக பனிப்போர் நடத்தி வந்த அமெரிக்க வல்லரசின் தாராள ஆதரவைப்பெற்ற இவ்வியக்கங்கள் அண்டை நாடுகளான பாகிஸ்தான், ஈரான் அரசுகளின் சார்பு இயக்கங்களாக, 'சகோதர யுத்தம்' நடத்துபவையாக மாற்றம் கண்டன. ரஷ்ய இராணுவத்திற்கும், நஜிபுல்லா அரசிற்கும் எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்த தன் விளைவால் 1989ல் ஆப்கானை விட்டு ரஷ்ய ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேறியது. 1992 இல் நஜிபுல்லா தூக்கி எறியப்பட்டு ரப்பானி தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. 1996 இல் ஆப்கானிஸ்தானின் 2/3 பகுதியைக் கைப்பற்றிய மத அடிப்படை வாத இயக்கமான 'தலிபான்' 'ரப்பானி' தலைமையிலான அரசாங்கத்தை விரட்டி

www.tamilarangam.net



விட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டது. ஆப்பானிஸ்தானை பேரழிவிற்கு உள்ளாக்கி விட்ட 18 ஆண்டு கால யுத்தம் இன்று வரை தொடர்கிறது.

ரஷ்சிய ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டத்தில் நடந்த ''சகோதரச் சண்டையும், யுத்தமும் தான்'', இன்று அண்டை நாட்டு அரசுகளின், வல்லரசுகளின் பகுதி வாரியான யுத்தமாக, இவர்களைப் பிரதி நிதித்துவப் படுத்தி நிற்கும் உள்நாட்டு ஆளும் கும்பல்களுக்கு இடையிலான யுத்தமாக இருக்கின்றது. மேலும் இது மத – இன அடிப்படை வாத சக்திகளின் உள்நாட்டு யுத்தமாகவும் ஆப்கானிஸ்தானையும், அதன் மக்களையும் உருக்குலைத்துக் கொண்டிருக்கின்றது. அமெரிக்கா, சவூதி அரேபியா, பாக்கிஸ்தான் ஆதரவைத் தலிபான் இயக்கம் பெற்றிருப்பதும், ஆட்சி கவிழ்க்கப்பட்ட ரப்பானி, ஹெக்மதியார் கூட்டணியை ஈரான், உஸ்பெஸ்கிஸ்தான் போன்ற நாடுகள் ஆதரித்து வருவதும், ஜெனரல் தோஸ்தம் தலைமையிலான இயக்கம், ரஷ்யா, கஜகஸ்தான் நாடுகளின் ஆதரவைப் பெற்றிருப்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். 1996 நவம்பரில் அமெரிக்கா உட்பட 19 நாடுகள் ஆப்கான் பிரச்சனை பற்றி விவாதிக்க ஈரான் தலைநகரில் கூடி வெளியிட்ட அறிக்கையில் ஆப்கான் போருக்குப் பின்னணியில் மேற்கூறிய நாடுகள் இருப்பதை ஒப்புக் கொண்டு ஆப்கான் அமைதிக்கு அழைப்பு விடுத்துள்ளனர். இந்த யுத்த வெறியர்களின் யுத்தத்தால், இவர்களின் யுத்தம் – சமாதனம் – அமைதி பற்றிய கொள்கைகளால், 60 லட்சம் மக்கள் உள்நாட்டிலும், மற்றம் ஈரானிலும், பாக்கிஸ்தானிலும் அகதியாக உள்ளனர்.

தெற்காசியவை நோக்கினால், தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தில் அன்னிய சார்பு இயக்கங்களைப் பார்க்க முடியும். தமிழீழப் போராட்டம் சகோதர யுத்த வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. குர்திஸ்தா னிலும், ஆப்பானிஸ்தானிலும் ஒரு இயக்கத்தின் கட்டுப்பாட்டு பகுதியை மற்றைய இயக்கங்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான சகோதர யுத்தங்கள் நடந்ததைக் காண்கின்றோம். ஆனால் தமிழீழ இயக்கங்கள் தமக்கென்று கட்டுப்பாட்டு பிரதேசத்தை உருவாக்கிக் கொள்வதற்கு முன்பாகவே இயக்க மோதல்களும் சண்டைகளும் தொடங்கி விட்டன. இந்த வளர்ச்சிப் போக்கில் 1986 இல் ரெலோவிற்கும், புலிகளுக்கும் இடையில் நடந்த 'சகோதர யுத்தம்' குறிப்பிடத்தக்கது. யாழ்பாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு முன்பாகவே பிற இயக்கங்களைப் புலிகள் அழித்தும், தடைசெய்தும் வந்தனர். அடுத்து இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்கு எதிரான போராட்டத்தின் போது நடந்து சகோதர யுத்தம் வித்தியாசமானதாக இருந்தது. PLOT, ENDLF, EPRLF, EPDP போன்ற துரோக இயக்கங்கள் இந்திய அரசின் ஆக்கிரமிப்பிற்கு உடந்தையா கவும், கூட்டாளிகளாகவும் செயற்ப ட்டன. இந்திய இராணுவ வெளியேற்றத்தின் பின் ENDLF தவிர்ந்த துரோகக் குழுக்கள் சிறிலங்கா அரசுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டன.

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து தீவுப் பகுதியைக் கைப்பற்ற சிறிலங்கா இராணுவம் மேற் கொண்ட தாக்குதலில் EPDP இயக்கம் கலந்து கொண்டது. தீவுப் பகுதியைக் கைப்பற்றி அதன் சிவில் நிர்வாகத்தை EPDP யிடம் கொடுத்த சிறிலங்கா இராணுவம் ''தான் ஆளுவதற்கல்ல தமிழர்கள் ஆளுவதற்குத் தான்'' புலிகளை ஆழித்து வருவதாகப் பொய்பிரச்சாரம் செய்தது.

இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போரிலும், அதன் பின்பான சிறிலங்கா இராணுவத்துடன் நடந்து வரும் போரிலும் எதிரிகளின் பக்கம் நின்ற தமிழ் இராணுவத் தலைமைகளை சகோதர யுத்தத்தின் மூலம் உள்நாட்டு யுத்த முனைகளில் புலிகள் அழித்ததை தவறானதாக நாம் பார்க்கவில்லை. ஆனால் புலிகளும் துரோகக் குழுக்களும் இக்காலப் பகுதிகளில் மக்கள் மேல் செய்த கொடுமைகள் கண்டிக்கப்பட வேண்டியவை.

தேசிய இன விடுதலைப் போராட்டத்தில், பிரதான எதிரிகளுடன் கூட்டுச் சேர்ந்து நின்று யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடும் ஒடுக்கப்பட்ட தேசிய இனத்தின் துரோக இராணுவத் தலைமைகள், சகோதர சண்டைகளாக, யுத்தங்களாக இருந்தாலும் அழிக்கப்படுவது தான் ஒடுக்கப்பட்ட இனத்தின், தேசத்தின் சுதந்திரத்திற்கு நன்மை பயப்பதாக இருக்கும்.

அதேவேளை அந்த யுத்தம் போராடும் மக்களின் நலனுக்காக நடத்தப் படுகின்றதா? அல்லது அண்டை நாடுகளின், வல்லரசுகளின் நலனுக்காக நடத்துப்படுகிறதா?என்றும் சொந்த மக்களின் பலத்தில் தங்கி நிற்கின்றதா? அல்லது வல்லரசிய, பிராந்திய விரிவாதிக்க அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகளின் ஏதாவது ஒன்றின் பலத்தில் தங்கி நிற்கின்றதா? என்பது தெளிவாக ஆராயப்பட வேண்டும். சொந்த மக்களின் பலத்தில் தங்கி நின்று தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்தை நடத்துவதே சரியான வழியாக இருக்கும்.

இந்திய ஆக்கிரமிப்புக்கு முந்தைய காலப் பகுதியில; PLOT, EPRLF, ENDLF, TELO, TENA, TEA இயக்கங்கள் மீது புலிகள் நடத்திய சகோதர யுத்தத்தை எக்காரணம் கொண்டும் ஆதரிக்க முடியாது. ஏனெனில் இது புலிகள் இயக்கத்தின் தனி இயக்க சர்வாதிகாரமாக இருந்தது. புலிகளின் அழித்தொழிப்பின் காரணமாகவே இந்தியா, சிறிலங்கா அரசுகளுடன் தாங்கள் கூட்டுச் சேர்ந்ததாகக் கூறும் துரோகக் குழுக்களின் வாதமும் ஏற்புடையதல்ல. அதேவேளை இந்திய, சிறிலங்கா அரசுகளிடம் இத்துரோக தலைமைகள் சரணடைவார்கள் என்று முன்கூட்டியே புலிகள் தீர்க்க தரிசனமாக தெரிந்து கொண்டதால் தான் அவர்களை ஆரம்பத்திலியே அழிக்க முடிவு செய்தார்கள் என்ற புலிகளது, புலிகளின் கண்மூடித்தனமான ஆதரவாளர்களின் சாஸ்திரவாதமும் நிராகரிக்கப்பட வேண்டியதே.

வல்லரசுகளையும் இந்தியா, சிறிலங்கா அரசுகளையும் எதிர்த்து தமிழீழ மக்களின் தேசிய விடுதலைக்காகப் போராடி வரும் தேசபக்த புரட்சிகர இயக்கங்களும், புரட்சியாளர்களையும் இந்தக் கணம் வரை ஏன் புலிகள் தடைசெய்துள்ளார்கள், சிறைப்பிடித்து அழித்து வருகிறார்கள். இங்கேதான் புலிகளின், புலி ஆதரவாளர்களின் அரசியல் பின்புலம் என்ன என்பது தெளிவாகத் தெரிய வருகிறது – வரும்.

ஒரு நாட்டின் தேசிய இனப்பிரச்சனையில் விடுதலைப் போராட்டத்தில், வல்லரசுகளும், பிராந்திய விரிவாதிக் அரசுகளும், அண்டை நாடுகளும் தலையீட்டைச் செய்யும். ''ஒரு நாடு இன்னொரு நாட்டின் உள் விவகாரத்தில் தலையீடுவதில்லை'' என்று ஐ.நா சாசனத்தில் எழுதி வைத்துக் கொண்டு, தமது நாட்டின் பாதுகாப்பு என்ற பெயரில் இந்த நாடுகள் தத்தமது பொருளாதார – அரசியல் – இராணுவ நலன்களை முன்னிறுத்தி இன்னொரு நாட்டின் உள் விவகாரத்தில் தலையீடு செய்கின்ற வெளியுறவுக் கொள்கையை கடைப்பிடித்து வருகின்றன. இன ஒடுக்கு முறைக்கு எதிராக ஒரு நாட்டில் உருவாகின்ற இயக்கங்கள் மத்தியில் தமது

www.tamilarangam.net



நலனுக்கு உகந்த செயற்படக் கூடிய இயக்கங்களை தெரிவு செய்து (உள்நாட்டு அரசிற்கு எதிராக செயற்பட உதவி அளித்துக் கொண்டே தனக்கு சாதகமான இயக்கத்தை தேர்ந்தெடுக்கின்றன. உதாரணமாக இந்தியஅரசு தமிழீழத்தின் 5 பெரிய இயக்கங்களுக்கும் உதவி வளங்கிய போதிலும் சிலதை மட்டும் மிகவும் நம்பகமானதாகத் தெரிவு செய்தன. வல்லரசுகளும் இவ்வாறு தான் செய்கின்றன.) அவற்றின் மூலமாக அந்நாட்டில் அப்பிராந்திய – உலக வல்லரசுகளும், அண்டை நாடுகளும் தமது நலன்களை பேணி வருகின்றன. தமக்கு சார்பான இயக்கங்களை கண்டு பிடிப்பதுடன் மட்டும் இவ்வரசுகள் நின்று விடுவதில்லை ஒரு விடுதலை இயக்கம் உள் முரண்பாட்டால் பிளவு படும் போது தமக்கு சார்பான இயக்கத்தை அதில் உருவாக்கிக் கொள்கிறது. PLOT இல் இருந்து ENDLF ஐ உருவாக்கியதும் EPRLF இல் இருந்து EPDP ஐ உருவாக்கியதும் இதற்கு உதாரணமாக உள்ளது. இதன் மூலம் தமது பிராந்திய – உலக ஆதிக்கப் போட்டிகளில், பொருளாதாரப் போட்டிகளில் மறைமுகமாக மோதிக் கொள்கின்றன. அதேவேளை இதில் தமது ஆயுத வியாபாரத்தையும் நடத்துகின்றன. விடுதலைப் போராட்டங்களை அதனை சரியான திசைவழியில் இருந்து வழுகச் செய்து தங்களின் ஆதிக்க நலன்களுக்கான யுத்தத்தில் தேசத்தை நாசம் செய்கின்றன. மக்களை போராட்டத்தின் மேல் வெறுப்படையச் செய்கின்ற 'சகோதர யுத்தம்' இறுதியில் உலக எதிகளுக்கே உதவுகின்றது. முடிவில் நமக்கிடையிலான போட்டியில் ஒரு உடன்பாட்டிற்கு வரும் பொது அவற்றை அமைதிக்கான – சமாதானத்துக்கான ஒப்பந்தங்களாக ஒடுக்கப்பட்ட மக்களின் – தேசிய இனத்தின் மேல் திணிக்கின்றன. தேசிய போராட்ட அரங்கில் உள்ள இயக்கங்களில் முதலாளிய, குட்டி முதலாளிய சிந்தனை, குறுக்கு வழி விடுதலைக் கொள்கை, உடனடி வெற்றியில் நாட்டம் போன்றவையே இவ்வியக்கங்களை அந்நிய சக்தியின் கருவிகளாக மாற்றுகின்றன.

ஒரு நாட்டில் நடக்கும் தேசிய இன ஒடுக்கு முறையை எதிர்ப்பது, ஒடுக்கு முறைக்கு எதிரான அத்தேசிய இன மக்களின் போராட்டங்களை ஆதரிப்பது என்பது முன்நிபந்தனை அற்ற சர்வதேசக் கொள்கையாகும். ஆனால் அத்தேசிய இனப் போராட்டத்தில் உள்ள குறிப்பிட்ட ஒரு இயக்கத்தை ஆதரிப்பதா? இல்லையா? என்பது குறிப்பிட்ட சில அடிப்படைக் கொள்கையில் இருந்து தீர்மானிக்கப்பட வேண்டும்.

முதலாவது, உள்நாட்டில் தேசிய இன ஒடுக்கு முறையில் அரசுக்கு எதிராகப் போராடுகின்றதா? இல்லையா? என்பது. (இரத்தம் சிந்துகிறதா இல்லையா என்பது அவ்வியக்கத்தின் வளர்ச்சியைப் பொறுத்தது.)

இரண்டாவதாக, தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் அண்டை நாடுகளின், பிராந்திய விரிவாதிக்க நாடுகளின் தலையீட்டை வெளிப்படையாக எதிர்க்கிறதா? இல்லையா? என்பது.

மூன்றாவது, தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் ஒடுக்கும் அரசுடன் கூடவே நிற்கும் உலக வல்லரசுகளை எதிர்க்கும் நிலைப்பாட்டை, போராட்டங்களை வெளிப்படையாக முன்வைக்கின்றதா? இல்லையா? என்பது.

நான்காவதாக, அண்டை நாடுகளில் பிராந்திய விரிவாதிக்க – வல்லரசு நாடுகளிலும் நடக்கும் தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிரான மக்கள் போராட்டங்களை ஆதரிக்கின்றதா? அல்லது மௌனம் சாதிக்கின்றதா? என்பது. இந்தக் கண்ணோட்டங்களில் இருந்து தான் குறித்த தேசிய இனத்தின் சுதந்திரத்தை – மக்களின் விடுதலையை இந்த நவ காலனிய சமூக அமைப்பில் ஒரு தேசிய இன விடுதலை இயக்கம் எப்படி சாதிக்கும் என்பதை புரிந்து கொள்ள முடியும் ஒவ்வொரு கேள்விக்கான பதிலில் அவ்வியக்கம் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றதோ அந்த நிலைப்பாட்டைக் கொண்டு தான் அவ்வியக்கம் எந்த எல்லைக்குள் ஆதரிப்பது, விமர்சிப்பது, கூட்டிணைவது என்பதும் மற்றும் எந்த விதமான எதிர் ராணுவ நடவடிக்கையில் (counter military action) ஈடுபடுவது என்பது தீர்மானிக்க முடியும்.

நவகாலனிய நாடுகளில் நடக்கும் தேசிய இன விடுதலைப் போராட்டங்களில் – யுத்தங்களில் எத்தகைய இயக்கங்களை – கட்சிகளை ஆதரிக்க வேண்டும் எனில் –தேசிய இன ஒடுக்கு முறைக்கு எதிராக போராடுகின்ற இயக்கம், அந்நாட்டில் ஒடுக்குகின்ற அரசை முற்று முழுவதுமாக தூக்கி எறிவதுதான் ஒரே வழி என்றும் தேசத்தின் விடுதலை என்பது எதிரியிடம் இருந்து மண்ணை விடுவிப்பது மட்டுமல்ல ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் பெரும்பான்மை உழைக்கும் மக்களின் சனநாயக உரிமைகளை வென்றெடுப்பதைக் கடமையாகக் கொண்டிருக்க வேண்டும்.

தேசியம் சனநாயகம் இரண்டையும் சமகாலத்தில் முன் வைத்துப் போராடுகின்றதும், வல்லரசியம், பிராந்திய விரிவாதிக்கம், அண்டைய நாடுகள் ஆகியவற்றின் தலையீட்டை வெளிப்படையாக எதிர்க்கின்ற, ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் – அரசியல் பொருளாதார விடுதலைக்காக போராடும் மக்களின் போராட்டங்களை ஆதரிக்கும் நிலைப்பாட்டை கொண்ட இயக்கமாக இருக்க வேண்டும். இவ் வியக்கங்களே புரட்சிகர தேசிய விடுதலை இயக்கமாக கருதி அவற்றை ஆதரிப்பதே புரட்சிகர சனநாயக வாதியின் சர்வதேசக் கடமையாக இருக்க வேண்டும். இருக்கவும் முடியும்.

''தான் தேசிய இனத்தின் மேலான ஒடுக்கு முறையை எதிர்க்காத ஒருவன், அவ் ஒடுக்கு முறைக்கு எதிரான அம்சங்களின் போராட்டத்தை ஆதரிக்காத ஒருவன் இன்னோர் நாட்டு தேசிய இன விடுதலைப் போராட்டத்தை, இயக்கத்தை ஆதரிப்பானாயின் அவன் அத்தேசிய இன விடுதலைப் போராட்டத்தின் ரசிகனாக மட்டுமே இருப்பான்.

❑❑

2 பக்கத் தொடர்

நாடுகளின் எண்ணிக்கை 13 மட்டுமேயாகும். ஒரு நாயை விட கீழான வாழ்வு வாழும் 68 நாடுகள் உள்ளன. ஒரு பூனையை விட கீழான வாழ்வை வாழும் நாடுகள் 54 ஆகும்.

இந்த உலக வாழ்கை தான் உலக அமைதியின்மைக்கு முக்கிய காரணம். இது தான் உலக சமாதானத்திற்கு சவால் விடுகின்றது. பணக்காரனின் ஆடம்பரமும் அவனின் அநியாய அழிப்பும் தான் உலக சமாதானத்திற்கு வேட்டு வைக்கிறது.

உலகில் வறுமை, பட்டினிக்கு அடிப்படைக் காரணம் உலக பணக்காரனின் கொட்டமே ஒழிய வேறு எந்தக் காரணமும் அல்ல. இதை மறுப்பதே, மறுதலிப்பதோ எல்லாம் ஏமாற்றும் மோசடியும் நிறைந்ததே. உலகில் இன்று 125 கோடி மக்கள், 5 பேருக்கு ஒருவர் வறுமையில் உள்ளனர் எனின், 30 கோடிச் சிறுவர்கள் உழைக்கிறார்கள் எனின், பணக்காரனின் திமிர்த்தனமான உழையாத சொகுசு வாழ்கை தான் காரணம். இதை நாம் புரிந்து கொள்வோம். இதை எதிர்த்துப் போராடுவோம்.

❑❑

www.tamilarangam.net



# பெருநாட்டுப் போராளிகளின் இழப்பும் எமது போராட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய படிப்பினைகளும்!

போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நாடுகளில் பலவற்றில் அப்போராட்டங்கள் பின்னடைவிற்கு உள்ளாகியுள்ளன. இப்பின்னடைவிற்கு காரணம் என்ன என்பது பற்றி அந்தந்த நாட்டுப் போராளிகள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர். இதற்கு பலகாரணங்கள் உண்டு, பேச்சுவார்த்தை, சனநாயக வழிக்கு திருப்புதல் என ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிற்கு பலியாகிப் போன நாடுகள் வரிசையில் பல லத்தீன் அமெரிக்க நாடுகள் உள்ளன. அவற்றிற்கு நேர் எதிரான போக்கைக் கொண்ட நாடான பேரு பின்னடைவிற்கு உள்ளாகியதற்கு வேறு ஒரு காரணமும் உண்டு. அதாவது ஒரு போராட்டமானது பரிணமிக்கு முன்னர் அதாவது மக்களை அரசியல் மயப்படுத்தி அதனூடாக ஸ்தாபன மயப்படுத்துவதற்கு முன்பாக உள்ள வழிமுறை அல்லது அணுகுமுறை தொடர்பான பிரச்சினையும் ஒரு காரணமாகியது. இதனால் காட்டிக் கொடுப்புக்களும் அதிகரித்தன, போராளிகள் மக்கள் மத்தியில் அதிகம் கால்லூன்ற முடியாது மக்களிடம் இருந்து அன்னியப்பட்டிருந்த வேளை, பலபோராளிகளும் அதன் தலைவர்களும் சிறைப் பிடிக்கப்பட்டனர். இவர்களில் மார்க்சீய அறிவியல் மேதையாக கணிக்கப்படும் கொன்சாலஸ் அபிமால் குஸ்மான் குறிப்பிடத்தக்கவர். இந்த நலிவடைந்த சூழலிலேயே கடத்தல் இடம் பெற்றது.

பேருவில் நடைபெற்ற பணயக் கைகதிகள் நடவடிக்கையைப் பற்றி கருத்துக் கூறுகின்ற போது இந்தச் சமூக அமைப்பின் கருத்துவடிவத்திற்கு அமையவே பத்திரிகைகள், ஏகாதிபத்திய தொடர்புச் சாதனங்களின் கருத்துக்கள் பிரதி பலிக்கின்றன. அனைத்து முதலாளித்துவவாதிகளும், பத்திரிகை களும் வெறும் பயங்கரவா தமாகவே சித்தரிக்கின்றன.

இப்போராளிகளின் போராட்ட நடவடிக்கையை எவ்வாறு வரையறுத்துக்கொள்வது? இது வெறும் பயங்கரவாதச் செயலா? போராட்டமானது பல வடிவங்களைக் கொண்டது. இதில் தனிநபர்களை கொல்லல், பணயக்கை திகளைப் பிடித்தல், விமானத்தைக் கடத்தல், கெரில்லாத் தாக்குதல், இப்படிப் பல. அதில் பயங்கரவாதமும் ஒரு போராட்ட வகையாகும். அவ்வடிவம் அரசியல் கருத்து ( ஒடுக்கப்படும் மக்கள்) சார்ந்து உள்நாட்டு, சர்வதேச சூழலைக் கொண்டு வடிவங்கள் மாறுபடுகின்றன. அதே போலவே பயணக்கைதிகள் நடவடிக்கையும் ஒரு தீர்க்கமான மக்கள் நலன் சார்ந்த அரசியல் கருத்தைக் கொண்டு அமைந்திருந்தன.

இவர்கள் கொல்வதாக மிரட்டினார்களேயன்றி கைதிகள் எவரையும் கொல்லவில்லை. இதிலிருந்தும், சலுகைகள் வளங்குவதாக கூறியபோதிலும் அதனை ஏற்றுக் கொள்ளாது இறுதிவரை தாம் கொண்ட கருத்தில் உறுதியாக இருந்து இவர்கள் பயங்கரவாதிகள் அல்ல அரசியல் கருத்துக்கொண்ட போராளிகளே என்பதை பறைசாற்றி மாண்டனர். ஆனால் ஏகாதிபத்தியக் கைக்கூலிகளோ பயங்கரவாதிகள் என பிரச்சாரம் செய்கின்றனர். இதற்கு பெரும்பான்மையான மக்கள் பலியாகிப் போவது துரதிஸ்டமானதே. (இதற்கு எதிர்ப்பு நடவடிக்கையாக டென்மார்க் நாட்டில் பேரு நாட்டின் உதவிதூதரகம் பெருநாட்டு தேசபக்தர்களினால் சேதப்படுத்தப்பட்டது. அத்துடன் சர்வதேச மன்னிப்புச் சபையானது பேச்சு வார்த்தையின் மூலம் தீர்க்கக் கூடிய சந்தர்ப்பத்தை தவிடுபொடியாக்கிவிட்டு ராணுவ நடவடிக்கை மேற்கொண்டதை விமர்சித்திருந்தது.)

இந்தப் போராட்டமானது யப்பானியச் தூதரகத்தில் இடம் பெற்ற விருந்தின் போது போராளிகள் யப்பானியச் தூதரகத்தில் நுழைந்து அங்கிருந்த சர்வதேச, உள்ளூர் அரசாங்க அமைச்சர்கள், அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்களை சிறைப்பிடித்தனர்.

400 பணயக்கைதிகள். இவர்களில் ஃப்ஜிமோறியின் சகோதரர், சகோதரிகளும் அடங்கும். பெண்கள் அனைவரையும் விடுவித்தனர். இவர்களை விடுதலை செய்யும் பட்சத்தில் போராளிகள் அனைவரையும் வேறு ஒரு நாட்டிற்கு செல்ல அனுமதிப்பதாகவும் ஆசை வார்த்தை கூறினர். இதன் முயற்சியாக எந்த நாடு இவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கக் கூடிய என்ன விபரத்தை அறிவதிலும், பேரங்கள் பேசி திசைதிருப்ப முனைந்தனர், எனினும் போராளிகள் அனைத்துக் வாக்குறுதிகளையும் நிராகரித்திருந்தனர்.

ஃப்ஜிமோறி இவ்வாறு காலத்தைக் கடத்திக் கொண்டிருந்த வேளை ஏகாதிபத்தியங்கள் ( ரஷ்யா உட்பட) ராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள சகல உதவிகளையும் வழங்குவதாக உறுதிமொழி கொடுத்தனர். ஆனால் யப்பானே எவ்வித ராணுவ நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டாம் என கேட்டுக் கொண்டது. இதற்கு ஃப்ஜிமோறியும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாட்டாது என உறுதிமொழி வழங்கியிருந்தார். இவ்விதமான நாடகமானது பணயக்கைதிகள் மீட்கப்பட்ட பின்னர் வழங்கப்பட்ட யப்பானின் நிதி அன்பளிப்பே இவர்களின் நாடகத்தை அம்பலப்படுத்தியது.

இந்த நடவடிக்கையை Nestor Cerpa என்பவர் தலைமைதாங்கி நடத்தினார். 43 வயதான இவர் முன்னைநாள் தொழிற்சங்கத்தலைவராவார். 1979 இல் தொழிற்சாலை ஒன்று மூடப்பட இருந்த வேளையில் அதனைக் தமது நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும் பொருட்டு அதனை கைப்பற்ற எடுத்த முயற்சியானது இரத்த வெள்ளத்தில் முறியடிக்கப்பட்டது. இவர் கைது செய்யப்பட்டு பின்னர் 10 மாதம் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் 1984 இல் Tupac Amaru என்ற அமைப்பை உருவாக்கினார். இதன்பின்னரும் கைதுசெய்யப்பட் இவர் 1990 இல் தலைநகரான லீமாவில் இருக்கும் Canto Grande சிறைச் சாலையில் இருந்து நிலக் கீழ் சுரங்கத்தின் மூலம் 50 போராளிகளுடன் தப்பிச் சென்றார்.

அவர்களின் சமாதிகளின் மேல் புற்கள் முளைப்பதற்கு முன்பாகவே ஏகாதிபத்தியத்தின் பிடியில் இயங்கும் திரைப்பட நிறுவனங்கள் அப்போரா ளிகளைப் பற்றிய படத்தையும் எடுக்கத் தொடங்கிவிட்டன. ஆம் இப்போரா ளிகளைப்பற்றிய படத்தினால் வரப்போகும் பணத்தை வேண்டாம் என்றா விட்டுவிடுவர். இந்த பணத்தை உழைக்க வேண்டும் என்பதற்குத்தானே. ஏகாதிபத்தியங்கள் மற்றையநாடுகளின் இறைமைகளை மதிக்காமல் மற்றைய நாடுகளின் மீது தலையிடுவதும் சதிசெய்வதுமாக இருக்கின்றன. நாய் விற்ற காசு என்ன குரைக்கவா போகின்றது என்ற நம் ஊர் பழமொழியே இவர்களுக்கு பொருந்தும்.

போராளிகளின் தலைவர்களை கொல்வதன் மூலமே அல்லது

3 பக்கம் பார்க்க

www.tamilarangam.net



1ம் பக்கத் தொடர்

பிரச்சினைகளை நம் கவனத்திற்கு கொண்டு வருகின்றது.

இன்று தமிழீழ விடுதலை ஆதரவாளர்களில் சிலர் இந்திய அரசின் தலையீட்டைக் கோருகின்றனர். 1987ல் இந்திய – இலங்கை ஒப்பந்தமும், இந்திய இராணுவத் தலையீடும் தமிழின அழிப்பு யுத்தத்திற்கு துணைநின்ற துரோக வரலாற்றை அவ்வளவு எளிதில் மறைக்க முடியுமா? அல்லது இன்றும் கூட இந்தியா நடத்திவரும் மறைமுகப்போரை கண்டும் காணாமல் தான் இருக்க முடியுமா? அதனால் தான் நாம் இந்திய அரசின் தலையீட்டை நிபந்தனை இன்றி எதிர்த்தாக வேண்டிய நிலையில் உள்ளோம்.

அதே போல் அய்.நா சபையின் தலையீடும் கோரப்படுகின்றது. இன்று உலகம் முழுவதும் பல நாடுகளில் நடந்து கொண்டிருக்கும் உள்நாட்டு யுத்தங்களில் தலையீட்டு ஒன்றையும் தீர்த்து வைக்க முடியாத நிலையில் அய்.நா சபை இருக்கிறது. அய்.நா சபை தலையிட்ட நாடுகளின் பிரச்சனைகள் இன்னும் மோசமாகி உள்ளதே ஒழிய தீர்வை நோக்கி ஓர் அடியும் எடுத்து வைக்கவில்லை. ஆகவே அய்.நா சபையின் தலையீடு என்பது இந்திய அரசின் தலையீட்டை விடவும் அதிகம் பாதகமானது என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. ஆகவே அய்.நா சபை தலையீட்டையோ அல்லது வேறெந்த மூன்றாவது நாட்டின் தலையீட்டையோ நிபந்தனையின்றி எதிர்த்துப்போராடுவதே போராடும் தமிழீழ மக்களுக்கு காட்டும் உண்மையான ஆதரவாக இருக்கும்.

இன்றைய தமிழின யுத்தம் நிறுத்தப்படவும், பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணவேண்டும் எனவும் அதிகப்படியானோர் விரும்புகின்றனர். ஆனால் யுத்தத்தை நிறுத்த யாரிடம் கோருவது? பேச்சு வார்த்தைகளுக்கான அடிப்படை என்ன? அரசியல் தீர்வு எதன் அடிப்படையிலானது? போன்ற பல கேள்விகளும் தொடர்கின்றன. தமிழீழப் போராட்ட ஆதரவாளர்களான நாமும் இந்தக் கேள்விகளை ஒதுக்கிவிட முடியாது. ஆகவே, ஈழத்தமிழர்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கின்ற, அவர்களின் தன்னாட்சி உரிமையைப் பாதுகாக்கக் கூடிய, இந்திய வம்சாவழித் தமிழர்கட்கும் குடியுரிமையை வழங்கக் கூடிய, தமிழீழப் பிரதேசத்தை அவர்களது பாரம்பரிய மண்ணாக அங்கீகரிக்கின்ற – இந்த அடிப்படைகளை முன்னிறுத்தி நடத்தப்படும் பேச்சு வார்த்தைதான், அரசியற் தீர்வுதான் அந்த மக்களின் விடிவைச் சாதிக்கும் படிக்கல்லாக அமையும்.

அடுத்து, இன்று உலக வல்லரசுகளின் கொள்ளைக் காடுகளாக மாற்றப்பட்டுள்ள ஏழை நாடுகள் அங்கே நடந்து கொண்டிருக்கும் இன உரிமை மற்றும் விடுதலைப் போராட்டங்கள், உள்நாட்டு யுத்தங்கள் கோடிக்கணக்கானவர்களை அகதிகளாக்கி வெளியேற்றிக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் தமிழின அழிப்பு யுத்தத்தால் லட்சக்கணக்கான தமிழர்கள் அகதிகளாக வெளியேறி இதோ நம் கண்முன்னாலே வதைபட்டு வாழ்கின்றனர். தமிழ் நாட்டிலே அகதிகளின் நிலையை சொல்லி மாளாது. மிகவும் அடிப்படையான மனித உரிமைகளும் மறுக்கப்பட்டு விலங்குகளிலும் கீழாக வதைக்கப்படுகின்ற நிலையை நாம் கண்டும் காணாமல் இருக்க முடியுமா? சிறப்பு முகாம்கள் என்ற சிறைகளில் – சிறப்பு வதைக் கூடங்களில் அடைக்கப்பட்டு, அகதிகள் உரிமைகள் இருக்கட்டும், மிகவும் அடிப்படையான உணவு, சுகாதாரம், மருத்துவம் கூட மறுக்கப்பட்டு வருகின்றனர். சட்டியில் இருந்து தப்பி நெருப்பில் விழுந்த மீன்போல் அல்லலுறுகின்றனர்.

அரசாங்கத்தால் நடத்தப்படும் அகதி முகாம்களின் அவல நிலையை நேரில் கண்டால் ஒழிய நம்பவே முடியாது. கொடுங் குற்றவாளிகளைப் போல் மிக கேவலமாக நடத்தப்படும் இவர்களுக்கு அகதிகளின் எந்த உரிமைகளோ ஏன் அகதி அந்தஸ்தோ கூட நிராகரிக்கப்பட்டுள்ளது. மாட்டுத் தொழுவங்களையும் மிஞ்சுகின்ற இந்த அகதி (வதை) முகாம்கள் பல்வேறு கொடுமைகளின் பிறப்பிடமாய் உள்ளது. பெண்கள் பாலியல் வன்முறைக்கு பலியாக்கப்படுவதை யாரும் கேள்வி கேட்டுவிட முடியாத ஹிட்லர் முகாம்களாக உள்ளது. அகதிகளுக்கு உதவித்தொகை, ரேசன் விநியோகம், லஞ்ச வசூலிப்பு இப்படி அனைத்திலும் ஊழல்களிலும் உறைவிடம் இந்த அரசாங்க முகாம்கள் – அகதிமுகாம்கள், வெளியில் இருந்து யாரும் இந்த இருண்ட உலகத்துக்குள் பிரவேசிக்க அனுமதி இல்லை. அத்தனை ஏன் நடுநிலையான ஆதரவாளர்களும், தொண்டு நிறுவனங்களும் கூட சென்றுவர முடியாத அளவிற்கு இங்கே ''சனநாயகத்தின்'' தடை.

உலக நாடுகளும், அய்.நா சபையும் அங்கீகரித்துள்ள ''அகதி அந்தஸ்து'' கூட தமிழீழ அகதிகளுக்கு மறுக்கப்பட்டுள்ள கொடுமையை என்னவென்பது? அவர்களின் அடிப்படை அகதி உரிமைகளும் பறிக்கப்பட்டு குற்றவாளிகளைப் போல் நடத்தப்படுகின்றனர். தூண்டிலில் புழுவாக வதைக்கப்படுகின்றனர். அவர்களுக்கான இருப்பிடம், உணவு, சுகாதாரம், கல்வி, பண்பாட்டு உரிமைகள் போன்ற அனைத்தும் பிடுங்கப்பட்டு இரு கால் விலங்குகளாக வதைக்கப்படுகின்றனர். புகலிடம் தேடி வந்தவர்கள் புறம் தள்ளி – திருப்பி அனுப்பப்பட்டனர்.

ஆம்! தமிழீழ ஆதரவாளர்களான நாம் இன்று செய்ய வேண்டிய கடமை மிகப்பெரியது. இன்று ''அகதிகளுக்கான ஆதரவு'' என்பது ''தமிழீழ விடுதலைக்கான ஆதரவில்'' இருந்து பிரிக்க முடியாது. இலங்கையில் இனப்பிரச்சனை முரண்பாடு இல்லாத வகையில் தீர்க்கப்படாமல் தமிழீழ அகதிகளின் பிரச்சனை முழுமையாக தீர்க்கப்பட முடியாது. இருப்பினும் இன்று கடலுக்கு அப்பால் வதைக்கப்படுகின்ற மக்களுக்கு ஆதரவுக்குரல் எழுப்பும் நாம், நம் கண் எதிரே அவர்கள் மேல் நடத்தப்படும் அரசின் இந்த மறைமுக யுத்தத்தை கண்டும் நாம் தூர விலக முடியாது. அவர்களின் அடிப்படை மனித உரிமைகள், அரசியல் உரிமைகள் பெற கரங்கோத்து போராடியாக வேண்டும். அவர்களுக்கு அய்.நா சபை பரிந்துரைப்படி ''அகதி அந்தஸ்தும்'' முழுமையான உதவி தொகையும் வழங்கப்பட வேண்டும். அகதிகளுக்கு அரசியல் உரிமை மறுவாழ்விற்கான கோரிக்கைகளுக்காக போராடாமல் தமிழீழ ஆதரவு அர்த்தமற்றது.

ஆகவே அனைத்து தமிழீழ ஆதரவாளர்களும் குறைந்தபட்சம் இந்த ஐந்து கோரிக்கைகளை முன்னிறுத்தி போராட வேண்டும். இந்திய மற்றும் தமிழீழ அரசை அய்.நா வை நிர்ப்பந்திக்க வேண்டும்.

⇒ *அகதிகளுக்கு அகதி அந்தஸ்து தரப்பட வேண்டும். சிறப்பு முகாம்கள் ரத்து செய்யப்பட வேண்டும். அகதிகளுக்கான அனைத்து அடிப்படை வசதிகளும் தரப்பட வேண்டும்.*

⇒ *அகதிகளுக்கு அனைத்து அடிப்படை மனித உரிமைகளும் சனநாயக உரிமைகளும் வழங்கப்பட வேண்டும். அகதிகளின் மறுவாழ்விற்காக திரட்டப்படும் அனைத்து உதவிப் பொருட்களும்*

www.tamilarangam.net



அவர்களை சென்றடைய அனுமதிக்க வேண்டும்.

⇒ தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

⇒ எந்த மூன்றாவது நாட்டு தலையீட்டையும் எதிர்க்க வேண்டும்.

⇒ இன அழிப்பு யுத்தம் உடனே நிறுத்தப்பட்டு தமிழீழ மக்களின் அடிப்படை கோரிக்கைகளை முன்னிறுத்தி பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்.

இப்படி தமிழீழ போராட்டத்தின் அனைத்துப்பரிமாணங்களையும் கருத்தில் கொண்டு செயல்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள, ஆதரவு திரட்ட, அணிதிரட்டிப் போராட, கருத்துப் பரப்பல் இயக்கங்களில் ஈடுபடுவதே இன்றைய நிலையில் தமிழீழ விடுதலைக்கு அதன் உண்மையான ஆதரவாளர்களின் கடமையாக இருக்கும்.

அகதிகள் ஆதரவு முன்னணி
தமிழ் நாடு
தொடர்பு முகவரி
**ந. முல்லைவேந்தன்**
**அருப்புக்கோட்டை, விருதுநகர்**
**காமராசர் மாவட்டம்,**
**தமிழ் நாடு 626 053**

**(இப்பிரசுரம் எமக்குக் கிடைக்கப்பெற்றதே. இதை நாம் இங்கு பிரசுரித்துள்ளோம்.)**

□□

# அரசியலும் இராணுவமும்

முன்னைய இதழின் தொடர்ச்சி –

இதுவே அவனது அராஜக நடவடிக்கைகளின் ஊற்று மூலமாகிறது. இப்படிப்பட்ட விரக்தி உள்ள ஊழியர்களை வைத்திருப்பதனால் ஒரு விடுதலை இராணுவம் தனது உறுதியான கட்டுப்பாட்டையும், போர் குணாம்சத்தையும், வெல்லற்கரிய வீரத்தையும் பேணமுடியாது சீரழிந்து போகிறது. ஆகவே இப்படிப் பட்டவர்களை வெளியேற அனுமதிப்பதன் மூலமே இராணுவமானது தனது புரட்சிகரத் தன்மையை பேண முடியும். விரக்தியுள்ள வீரர்களைக் கொண்டு புதிய நம்பிக்கை மிக்க சமுதாயத்தை படைக்கப்போவதாகக் கூறிக்கொள்வது 'ஆண்டிகள் மடம் கட்டிய' கதை போன்றே. தமிழர்கள் பிறக்கும் போதே இலங்கைப் பிரஜைகளாகவே பிறந்தவர்கள். சுதந்திரத்தின் பின்பு 25 வருடம் ஒற்றை ஆட்சி முறையை ஏற்றுக் கொண்டே வாக்களித்தார்கள். ஆயினும் சிங்களப் பேரினவாதத்துடன் தொடர்ந்தும் இணைந்தும் வாழமுடியாது எனக் கருதும் பட்சத்தில் பிரிந்து சென்று தனிநாட்டை அமைக்க விரும்புகிறார்கள். இந்த சுயநிர்ணய உரிமையை சிறிலங்கா அரசு ஏற்றுக் கொள்ளாதது மட்டுமின்றி அடக்கவும் முனைந்த போது தமிழீழப் போராட்டம் வெடிக்கிறது. இது அனைவருக்கும் விளங்கக்கூடிய விடயமே. விடுதலை இயக்கத்தால் முன்வைக்கப்பட்ட கொள்கைகளையும், வேலைத் திட்டங்களையும் ஏற்றுக் கொண்டு அதில் சேரும் ஒருவன் அதன் வளர்ச்சிக்காகவும் வெற்றிக்காகவும் கடுமையாக உழைக்கிறான். சிறிது காலத்தில் முன்பு தன்னால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தாபனத்தின் கொள்கைகள், வேலைத் திட்டங்களையும் தாபனமானது விசுவாசகமாக முன்னெடுக்கவில்லை என்பதனை உணரும் போது அந்த ஊழியன் அந்தத் தாபனத்தை விட்டு வெளியேறவும் தொடர்ந்தும் புரட்சிக்கும் மக்களுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை வேறோர் தாபனத் தினூடாகவோ முன்னெடுக்கிறான். இது அவனது அடிப்படை அரசியல் உரிமையாகும். ஆனால் இது பலருக்கு இன்னும் புரியாது இருப்பது வருந்தத் தக்கதே.

ஊழியர்கள் இந்த அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுப்பதற்கு 'இயக்கத்தில் பயிற்சி பெற்றவன்' 'இயக்க இரகசியங்களை அறிந்தவன்' எனக் காரணம் காட்டுகிறார்கள். அவனுக்கு பயிற்சி வழங்கியதைக் குறிப்பிடுவார்கள். அவனது கடந்த கால உழைப்பால் இயக்கம் பெற்ற இலாபங்களை மறந்து விடுவார்கள். அவன் வெளியேறி விடுதலைக்காக வேறோர் அணியில் செயற்படுகிறான் என்பதையும் மறந்து விடுகிறார்கள். இரகசியங்களைப் பேணல் என்ற செயல் முறைகளின் பின்னால் சில இயக்கத் தலைமைகள் முன்வைத்த தமது இயக்கக் கொள்கைகளை, வேலைத் திட்டங்களை விசுவாசமாக முன்னெடுப்பதையும், அத்தலைமையை விமர்சித்துத் திருத்த ஊழியர்களுக்கு வாய்ப்பளிக்காமையையும், அந்தத் தாபனம் புரட்சியை முன்னெடுக்காது என உணர்ந்து வெளியேற விரும்பும் ஊழியர்களை பலவந்தமாக தடுத்து வைத்திருப்பதையும் இனங்காணத் தவறக் கூடாது. தமது மோசடிகளும் மக்கள் விரோத நடவடிக்கைகளும் அம்பலமாகாது தடுப்பதற்கும் இத்தகைய கட்டுப்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நடைமுறைகள் மாற்றி அமைக்கப்படாத வரை விடுதலை இயக்கத் தலைமைகள் இழைக்கும் தவறுகள் திருத்தப்பட வாய்ப்புகள் ஏற்படமாட்டாது. இப்படிப் பாதிக்கப்பட்ட உணர்வுகளை உடைய இராணுவமானது ஈவிரக்கமற்ற கொடிய நீண்ட புரட்சிகர யுத்தத்தில் தியாகங்களுக்கும், அர்ப்பணிப்புகளுக்கும் ஊடாக தனது வீரஞ்செறிந்த போராட்டத்தை முன்னெடுக்காது.

இது போன்ற ஜனநாயக நடவடிக்கைகள் இராணுவத்தை உடைத்து சின்னா பின்னப் படுத்திவிடும் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால் சீனமக்கள் விடுதலைச் சேனை 20 வருடத்திற்கு மேலாக உறுதியாகப் போராடியது புரட்சிகர யுத்தத்தில் இறுதிக் கட்டத்தில் செஞ்சேனையில் 30 லட்சம் போர் வீரர்கள் இருந்தார்கள் இவ்வளவு பெரிய இராணுவத்தை இவ்வளவு நீண்ட காலத்திற்கு மிகக் கடுமையான போராட்டத்தினுள்ளே வைத்திருக்க முடிந்ததே இது போன்ற ஜனநாயக நடவடிக்கைகளாலேயே தான். தனது தாபனத்துக்குள் ஜனநாயகத்தை பேண முடியாத அமைப்புகளால் விடுதலையின் பின்பு திடீரென ஜனநாயத்தையும் மனித நேயத்தையும் கொண்டு வந்து விட முடியும் என எதிர்பார்க்க முடியாது தானே.

மேலும் தாபனம் சிதைந்து விடாதிருக்க, ஐக்கியத்தைக் காப்பதற்காக தாபனத்தை விட்டு வெளியேறும் உரிமை மறுப்பதென்பது ஒரு மாக்சிய வாதி பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்காக தேசிய இனங்களின் உரிமையை மறுப்பதற்கு சமமாவது. தேசிய அடக்குமுறை இருக்கும் வரை அடக்கப்படும் இனத்தைச் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் அடக்கும் இனத்தைச் சேர்ந்து பாட்டாளி வர்க்கத்தை சந்தேகத்துடனேயே பார்க்கும்.

அடக்கப்படும் தேசிய இனத்தின் பிரிந்து செல்லும் உரிமையை ஏற்றுக் கொண்டு அதற்காகப் போராடுவதன் மூலமே அடக்கும் தேசிய இனத்தின் பாட்டாளி வர்க்கம் அடக்கப்படும் தேசிய இனத்தின் பாட்டாளிகளின் நம்பிக்கையைப்

www.tamilarangam.net



பெறமுடியும். இதனாலேயே பாட்டாளி வர்க்க சர்வதேசியம் என்பது நடைமுறைச் சாத்தியமாகும். ஆகவே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் முன்நிபந்தனையாகிறது. அதாவது பிரிந்து செல்லும் உரிமையை அங்கீகரிப்பதே சர்வதேசப் பாட்டாளிகளின் ஐக்கியத்திற்கு வழிவகுக்கும். இவ்வாறே இராணுவத்தினுள் வீரர்கள் பலவந்தமாக இணைக்கப் பட்டிருக்கும் வரை உண்மையான ஐக்கியம் ஏற்படமாட்டாது. அவர்களது வெளியேறும் உரிமையை ஏற்றுக் கொள்வதனால் மட்டுமே உணர்வு பூர்வமான காரியார்த்தமான ஐக்கியம் தோன்றும்.

**மக்களுடனான உறவுகள்.**

சீனச் செஞ்சேனை தான் முகாமிட்டிருக்கும் கிராமத்திலிருந்து வெளியேறும் போது அக்கிராமத்து மக்கள் கண்ணீர் வடிப்பார்கள். இந்தளவிற்கு மக்கள் அன்பைப் பெற்றிருந்தார்கள். மக்களின் விடுதலைக்காக ஆயுதம் ஏந்திப் போரிடுவதுடன் நின்று விடாது மக்களின் அனைத்துத் துன்பங்களிலும் பங்கெடுத்துக் கொண்டார்கள். மக்களுக்கு உற்பத்தியில் உதவி புரிந்தார்கள், வெள்ளம் வரட்சி போன்ற துன்பங்களின் போது அவர்களை அவற்றில் இருந்து மீள்வதற்கு உதவினார்கள். இவற்றிற்கு எல்லாம் மேலாக இராணுவத்தில் இருந்து கட்டுப்பாடுகள் மக்களுடனான உறவுகளை நல்ல முறையில் பேணுவதில் மிகுந்த பங்காற்றின. சீனச் செஞ்சேனையில் 'மூன்று பிரதான கட்டுப்பாடுகளும், கவனத்திற்குரிய எட்டம்சங்களும்' என இவை வழங்கப்படலாயிற்று.

மூன்று பிரதான கட்டுப்பாட்டு விதிகள்

1.அனைத்து நடவடிக்கைகளிலும் கட்டளைக்கு கீழ்ப்படி

2.மக்களிடமிருந்து ஒரு ஊசியையோ நூலையோ எடுக்காதே

3.கைப்பற்றிய எல்லாவற்றையும் ஒப்படை

**கவனத்திற்குரிய எட்டம்சங்கள்**

1.மரியாதையாகப் பேசு

2.வாங்குவதிலும் விற்பதிலும் நியாயமாக நடந்து கொள்

3.கடன் வாங்கியதைத் திருப்பிக் கொடு

4.சேதங்களுக்கு நட்ட ஈடு செலுத்து

5.மக்களை அடிக்கவோ நிந்திக்கவோ கூடாது

6.பயிர்களை அழியாதே

7.பெண்களிடம் ஒழுங்கீனமாக நடவாதே

8.கைதிகளைத் துன்புறுத்தாதே

இவ்விதிகள் சிலபிரதேசங்களில் குறிப்பான நிலமைகளின் கீழ் அப்பிரதேச மக்களின் பண்பாடுகளைக் கருத்திற் கொண்டு 'பெண்களின் கண்ணுக்குப் படும்படியான இடங்களில் குழியாதே' 'கைதிகளின் சட்டைப்பைகளை சோதனை போடாதே' என்பன போன்ற விதிகளும் கூட உள்ளடங்கி இருந்தன.

இன்று விடுதலைப் போராட்டத்தில் ஓங்கியுள்ள அராஜகங்களை பார்க்கும் போது எமது விடுதலை இயக்கங்கள் மக்களின் அன்பைப் பெறுவதற்கு எவ்வளவு உயர்ந்த கட்டுப்பாட்டை பேணவேண்டி உள்ளது என்பதை இலகுவாக உணரலாம். எமது போராட்டத்தின் போக்கிலேயே இது போன்ற உயர்ந்த அம்சங்கள் பரிணமிக்கின்றனவா என கூர்ந்து அவதானிப்பது ஒவ்வொரு போராளியினதும் கடமையாகும். எமது விடுதலைப் போராட்டமானது இனவாத அடக்கு முறைக்கு எதிரானது என்ற ஒரே காரணத்தால் முற்போக்கானதாக புரட்சிகரமானதாக இருந்து விடும் என எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் யூதர்களின் ஆரம்ப கால சியோனிச நடவடிக்கைகள் கூட யூதருக்கு எதிரான அடக்கு முறைகளை முறியடிப்பதற்கான போராட்டமாகவே காணப்பட்டன. ஆனால் இன்று உலகப் பிற்போக்குத் தனங்கள் அனைத்தினதும் வாரிசாக இஸ்ரேல் தொழிற்படுகிறது.

ஆகவே நாம் ஒரு உயர்ந்த, புதிய சமுதாயத்தை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறோமா என்பதை உறுதி செய்துகொள்வது அவசியமானது. ஒரு இராணுவம் எந்தளவிற்கு மக்கள் இராணுவமாக தன்னை அமைத்தக் கொண்டுள்ளது என்பதனை அறிந்து கொள்ள இந்த விதிமுறைகள் சிறந்த உரைகல்லாகும். இப்படிப்பட்ட இராணுவத்தை நம்பியே மக்கள் தமது எதிர்காலத்தை ஒப்படைக்கத் தயாராவார்கள். அப்படி இயக்கங்கள் தம்மை மாற்றியமைக்காத வரை "மக்களே பங்காளிகளாகுங்கள்" என்ற சுலோகம் வெறும் பிரச்சார சுலோகமாக மட்டுமே இருக்கும்.

**போராட்டமும் பிரச்சாரமும்.**

புரட்சிகரப்போராட்டத்தில் தாபனங்களின் பிரச்சாரங்கள் அமைய வேண்டிய முறைகள் பற்றி கியூபாப்புரட்சித் தலைவர் சேகுவரா குறிப்பிடும் போது "உண்மையைக் கூறுவதே புரட்சித் தாபனத்தின் பிரச்சாரத்தில் மிக அடிப்படையான விதியாகும். தனது கெரில்லாக் குழுவின் நடவடிக்கைகள் பற்றி மிகச் சரியான தகவல்களையே எப்பொழுதும் கொடுக்க வேண்டும். பெரிய பொய்களைக் கூறி செயற்கையான பிரம்மைகளைக் கொடுப்பதை விட சிறியதாயினும் உண்மைகளைக் கூறுவதே நீண்ட காலத்தில் பயனளிக்கக் கூடிய கொள்கையாகும்." என்றார்.

விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் நடத்தப்படும் கெரில்லாத் தாக்குதல்களின் நன்மையான அம்சங்களில் ஒன்று அது மக்களுக்கு போராட்டத்தின் பால் நம்பிக்கை ஊட்டுவதே ஆகும். கெரில்லாத் தாக்குதல்களால் எதிரி இராணுவ வீரர்கள் கொல்லப்படுவதை, அல்லது பின்வாங்கி ஓடுவதைக் காணும் மக்கள் எதிரி இராணுவம் என்பது வெல்லப்பட முடியாதது அல்ல நவீன ரக வாகனங்களில் கம்பீரமாக வலம் வரும் அதிகாரிகள் கூட மிக எளிதாகச் சுட்டு வீழ்த்தப் படக் கூடியவர்களே என்பதைக் காண்கிறார்கள். இது மக்களது நிராதரவான உணர்வுகளைத் தகர்த்து அவர்களைப் போராட்டத்தின் பால் நம்பிக்கையூட்டுகிறது. அணிதிரள உதவுகிறது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப நிலையில் நிகழ்த்தப்பட்ட மிக எழிய முறையிலான தாக்குதல்கள் கூட இந்த விதமான சாதகமான அம்சங்களைக் கொண்டிருந்த போதும் அதில் ஈடுபட்ட போராளிகளால் தம்மை வீர புருசர்களாகக் காட்டும் நோக்கில் அத்தாக்குதல் சம்பவங்களை பாரிய சாதனைகளாக காட்ட முனைந்தார்கள் அல்லது சாதாரண மக்கள் அவற்றை விட்டு 'ஜெம்ஸ்பொண்ட்' பாணியிலான கதைகள் பேசுவதை தெரிந்தும் அனுமதித்தார்கள். தமது நடவடிக்கை மூலம் ஊக்குவித்தார்கள்.

ஆரம்பத்தில் நடத்தப்படும் எளிய விதத்திலான தாக்குதல்களின் வெற்றிகளைப் பற்றிய உண்மைகளை உள்ளபடியே மக்களுக்குக் கொடுப்பதே அந்த மக்களை 'எம்மாலும் செய்யலாம்' என்ற நம்பிக்கையூட்டி அவர்களைப் போராடுமாறு தூண்டும். மாறாக அந்தத் தகவல்கள் பற்றி தவறான அல்லது மிகைப்படுத்தப்பட்டு புனைகதை பாணியிலான செய்திகளைக் கொடுத்தால் மக்களை கனவு காண்பவர்களாகவே வைத்திருக்கும். இத்தாக்குதலில் ஈடுபட்டவர்களை வீர புருசர்களாகக் காட்டுவதானது மக்களை ஆயுதப் போராட்டமானது தமது சக்திக்கு மேற்பட்ட "விசேட திறமை" பெற்றவர்களது நடவடிக்கைகள் எனக் கருதுவதற்கு வழிவகுக்கும். இது அவர்களை போராட்டத்தில் பங்காளிகளாக மாற்றுவதற்குப் பதிலாக

www.tamilarangam.net



பார்வையாளர்களாகவே வைத்திருக்கும். இச்செயன் முறைகளால் மக்கள் போராளிகளைப்பற்றி அதீத மதிப்பீடுகளை கொள்ளச் செய்துபோராளிகளை தியாகிகள், புனிதமானவர்களாகக் கருதி சலுகையுடன் நடத்த வழிவகுப்பதால் போராளிகள் அவற்றை ஊக்குவிக்கிறார்கள். ஆனால் போராட்டம் வளர்ந்து உக்கிரமடையும் போது, மக்கள் பார்வையாளர்களாக விலகி நிற்கும் போது இதன் பாதகமான அம்சங்களை முகம் கொடுக்க நேரிடும். அத்துடன் தம்மைப்பற்றி இவ்வாறு உயர்ந்தவர்களாக கருத முனைபவர்கள் தமது கடமை மக்களுக்கு ஊழியம் செய்வதே என்பதை மறந்து மக்களது அதிகாரிகளாக மாற முனைகின்றார்கள். இதுவும் போராளிகளை மக்களைவிட்டு அன்னியப் படுத்தவே வழிவகுக்கும்.

போராட்டம் வளரும் காலத்தில் சில இயக்கங்கள் ஏனைய இயக்கங்களுடனான போட்டி காரணமாக தமது இயக்கப் பலத்தைப்பற்றி மிகையான மதிப்பீடுகளை வெளியிடுகிறார்கள். இதன் மூலம் மக்களின் மத்தியில் செல்வாக்குச் செலுத்த முடியும் எனக் கருதுகிறார்கள். இயக்க அங்கத்தவர்களினதும், தமது இராணுவத்தில் உள்ளோரினதும் எண்ணிக்கை பற்றி மிகையாகக் கூறல், தமக்கு சர்வதேச ரீதியாக அதிகம் செல்வாக்கு இருப்பதாகக் காட்ட முனைதல், தமக்கு பிற நாடுகளில் இருந்து உதவிகள் கிடைக்க இருப்பதாகக் கூறல், போன்றவை இந்த வகையில் அடங்கும். இவை கூட மக்கள் தமக்கு சுலபமாக வீடுதலை கிடைக்கும் என கருதி தமது பங்களிப்பேதுமின்றியே விடுதலைக்கான நாட்கள் எண்ணும் போக்கை தோற்றுவித்து விடுகின்றது. எமது போராட்டத்தில் இந்த வகையான பாதிப்பு மிக அதிகம் என்றே கூற வேண்டும். அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தலில் தமக்கு வாக்களித்தால் தாம் தமிழீழத்தை எப்படியோ பெற்றுத் தருவோம் என்று கூறியதற்கும், இன்று இயக்கங்களின் இந்தப்போக்கிற்கும் சாரம்சத்தில் அதிக வேறுபாடு கிடையாது. கசப்பானதாக இருப்பினும் உண்மைகளை, மக்களை முகம் கொடுக்க வைப்பதே அவர்கள் போராட்டுத்தின் கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொண்டு படிப்பினை பெறவும், அவற்றை ஈடு செய்யும் முகமாக தமது பங்களிப்பை வளங்குவது பற்றி அவர்கள் சிந்திக்கவும் வழிவகுக்கும். சர்வதேச முரண்பாடுகளுக்கு தமிழீழப் போராட்டம் அடகு வைக்கப்படும் இன்றைய ஆபத்தான நிலையில் கூட உண்மைகளை மூடி மறைப்பது மிக மிக ஆபத்தானது. நாளை இயக்கங்கள் மிக மோசமான ஒடுக்கு முறைகளை, கஷ்டங்களை முகம் கொடுக்க நேரிடும் போது மக்களால் கைவிடப் படக்கூடிய ஆபத்தான நிலை ஏற்படும்.

விடுதலைப் போராட்டமானது மிகக்கடினமான தடைகளைத் தாண்டியே செல்ல வேண்டியுள்ளது. இதில் பல இழப்புக்களுக்கும், தோல்விகளுக்கும் முகம் கொடுக்க நேர்வது தவிர்க்கப்பட முடியாததே இந்த இழப்புக்ளையும் மீறி வீடா முயற்சியுடன் போரிடுவதிலேயே இறுதி வெற்றி தங்கியுள்ளது. தமிழீழப் போராட்டமும் இன்று பல இழப்புக்களுக்கும் தோல்விகளுக்கும் மத்தியிலேயே முன்னேறிச் செல்கின்றது. ஆனால் சில இயக்கங்கள் போராட்டத்தில் தமக்கு ஏற்படும் இப்புக்களை மக்களுக்கு மறைக்க முயல்கின்றார்கள். தோல்வியிலே முடிவடைந்த தாக்குதல்களை வெற்றியானதாகப் பெய் கூறுகிறார்கள். தாக்குதல்களில் கொல்லப்பட்ட தோழர்களின் எண்ணிக்கையை குறைத்தும், கொல்லப்பட்ட எதிரி வீரர்களின் எண்ணிக்கையை மிகைப்படுத்தியும் கூறல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பொறுப்பற்ற விதத்தில் மக்கள் நலனுக்கு விரோதமான தாக்குதல்கள், கடத்தல்கள், கொள்ளைகள், கொலைகள் போன்ற விடுதலைக்கு மாறான நடவடிக்கைகளில் ஈடுபடுதல், மக்களது எதிர்ப்பைக் கண்டதும் ஒரு மறுப்பறிக்கையை விடுவதன் மூலம் தமக்கு இதில் சம்மந்தம் இல்லை எனக் காட்ட முனைதல் இது இன்னொரு வகை. இந்தப் பொய்கள் சிறிது காலத்தின் பின்பு மக்களுக்கு தெளிவாகும் பொழுது மக்கள் இயக்கங்களின் சரியான கூற்றுக்களைக் கூட நம்ப மறுக்கிறார்கள். இன்று தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ''லங்கா புவத்'' அறிக்கைக்கும் இயக்க அறிக்கைக்கும் இடையில் அதிக வேறுபாட்டைக் காண முடியவில்லை. அது மக்களை மோசமான சூழ்நிலைத்தில் ஆழ்த்தி நம்பிக்கையை இழக்கச் செய்யும். இவ்வறிக்கையின் தன்மைகளைக் காணும் தமிழ் மக்கள் சர்வதேச ரீதியில் வெற்றி பெற்ற ரஷ்ய, சீன, கியூபா, வியட்நாம் போராட்டங்களையும் இன்று வெற்றிகரமாக முன்னேறி வரும் எல்சல்வடோர், பேரு, பலஸ்தீனப் போராட்டங்களைப் பற்றிக் கூட சந்தேகப் படும் அளவிற்கு நிலமை சென்றுள்ளது. அந்தப் போராட்டங்கள் கூட வெறும் அறிக்கைப் போராட்டங்கள் தானா என கேள்வியெழுப்ப முனைகிறார்கள். என்றால் இந்தப் பொய்ப்பிரச்சாரத்தின் தாக்கம் எந்தளவிற்கு எற்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களுக்காக, மக்களின் விமோசனத்திற்காக போராடுவதாகக் கூறிக் கொள்ளும் போராளிகள் அந்த மக்களுக்கே ஏன் பொய் சொல்ல வேண்டும் தமக்கு ஏற்படும் கேள்விகளைக் கூறினால் மக்கள் தம்மைக் கைவிட்டு விடுவார்கள் என அஞ்சத் தேவையில்லை. தமக்கு உண்மையாக நடந்து கொள்ளும் விடுதலை இயக்கங்களுக்கே மக்களும் உண்மையாக நடப்பார்கள், நேசிப்பார்கள். போராட்டத்தின் வெற்றிக்காக தமது பங்களிப்பை வழங்க முன்வருவார்கள். தமது விமோசனத்திற்காக நடத்தப்படும் போது போராட்டத்திலுள்ள குறைபாடுகளைக் காணும் மக்கள் அந்தக் குறைபாடுகளைக் களைய முனைவார்கள். தமது பங்களிப்பு மூலம் அக்குறைபாடுகளை ஈடு செய்யவே முனைவார்கள். ஆகவே பிரச்சாரத்தைப் பொறுத்தவரை குறுகிய காலப் போலியிலான ''கௌரவத்திற்காக'' நீண்ட காலத்தில் ஊறு விளைவிக்கும் இது போன்ற பிரச்சாரங்களை மக்களை பங்காளிகளாக்குவதற்கு ஒரே வழியாகும்.

மறைந்த விடுதலைப் போராளிகளுக்கு அஞ்சலி செய்யும் போது தவறான முறைகள் கடைப்பிடிக்கப் படுகின்றன. மறைந்த தோழனைப் பற்றிக் கூறும் போது அவனது பலம் பலவீனம் பற்றி ஒரே விமர்சன நிலையில் அணுகுவதே மக்களுக்கும், சக போராளிகளுக்கும், அப் போராளியின் வாழ்வில் இருந்து படிப்பினை பெறவும், அவனது நல்ல அம்சங்களைப் பின்பற்றவும் உதவும். ஆனால் அவனது திறமைகளைக் குறிப்பீடுவதாக, கௌரவிப்பதாக கருதிக் கொண்டு அவனை மக்களின் சக்திக்கு அப்பாற்பட்ட வீர புருசனாக சித்தரிக்க முயல்வது தவறானது.

இவ்வாறு பல வேறுபட்ட செயன் முறைகளால் விடுதலை இயக்கங்கள் தாமாகவே மக்களை விட உயர்ந்தவர்களாகக் காட்ட முனைந்து மக்களிடமிருந்து அந்நியப்பட்டு விட்டு, மக்களே பங்காளிகளாகுங்கள் எனக் எனக் கோருவதில் பயனேதும் விளைவிக்கப் போவதில்லை.

எப்படியாவது செல்வாக்கைப் பெற்று விடவேண்டும் என்ற ஆவலில் பல குறுக்கு வழிகள் இன்று கையாளப்படுகின்றன. ஒரு இயக்கம் ஏனைய சகல இயக்கங்களைப் பற்றி அரசியல் ரீதியான விமர்சனங்களாக

www.tamilarangam.net



அல்லாமல் - அவதூறான கருத்துக்களை மக்கள் மத்தியிலும், ஏனைய சர்வதேச தாபனங்கள் மத்தியிலும் முன் வைக்கின்றார்கள். இது மிகவும் கண்டிக்கத்தக்கதாக குறும் பார்வையுடைய நடவடிக்கையாகும். இப்படி ஒவ்வொரு இயக்கமும் பரஸ்பரம் செய்ய முயலும் போது அனைத்து இயக்கங்களைப் பற்றியுமே அவதூறுகளை அனைவரும் சேர்ந்தே பரப்புகிறார்கள் என்பதை காணத் தவறுகிறார்கள்.

பிரச்சார யுத்திகளில் இயக்கங்கள் செய்யும் மோசடியான, வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் தம்முடைய கருத்துக்களை தமது தாபனப் பெயரில் வெளியிடுவதற்கு துணிச்சலற்று பொதுமக்கள், விடுதலை விரும்பிகள், இளைஞர்கள், ..... ..... இது போன்ற பெயர்களில் வெளியிடுவதாகும். இது போன்ற நடவடிக்கைகளால் வெகுஜனங்கள் தமது கருத்துக்களை பகிரங்கமாக வெளியிடக் கூடிய வாய்ப்புக்களை, இயக்கங்கள் அபகரிப்பதாக அர்த்தப்படும். அத்துடன் இயக்கங்கள் அந்தக் கருத்துக்களை தமது தாபனப் பெயரில் கூறினால் மக்கள் நம்ப மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டதன் விளைவே இப்படிப்பட்ட நடவடிக்கையாகும். ஆனால் எமது மக்கள் இது போன்ற ''அநாதை'' பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் கூட இனம் காணத் தவறவில்லை.

மக்களை படிப்படியாக நடைமுறை உண்மைகளுக்கூடாக வென்றெடுத்து அவர்களை தாபன மயப்படுத்தி போராட்டத்தை முன்னெடுப்பதற்கு நீண்ட காலம் தேவைப்படும். மக்களின் சக்தியில் நம்பிக்கை உள்ளவர்கள் மட்டுமே இதனை சாதிக்க முடியும். மக்கள் சக்தியில் நம்பிக்கை அற்ற, பொறுமையும் கடியஉழைப்பில் ஈடுபாடுமற்ற குட்டி முதலாளித்துவ சக்திகளே எப்படியும் குறுகிய வழியிலாவது தமது இலக்கை அடைந்து விட முயலுவர். இந்த குட்டி முதலாளித்துவ அணுகு முறைகளின் விளைவே நாம் மேலே கூறிய தவறான அம்சங்களாகும்.

உண்மைகள் கசப்பானவை, ஆனால் அவற்றில் இருந்து படிப்படியாக படிப்பினைகள் பெற்று மக்கள் தெளிவடைந்து உறுதியடைவார்கள். கவர்ச்சிகரமான பொய்கள் மக்கள் மனதில் மாயத் தோற்றங்களையும், வெறும் கனவுகள் கலையும் போது ஏமாற்றமும் விரக்தியுமே மிஞ்சும். போராளிகள் மக்களுக்கு விசுவாசமாக இருக்காத வரை மக்களும் போராளிகளை நம்ப மாட்டார்கள். என்பதை உணர்ந்து இந்த குட்டி முதலாளித்துவ ஏமாற்று வித்தைகளை கைவிட்டு மக்களுக்கு உண்மையாக இருப்பதன் மூலமே பிரச்சாரம் விடுதலைப் போராட்டத்தில் தனது காத்திரமான பங்களிப்பை வழங்க முடியும்.

## சமரசங்கள் பற்றி

அரசியலின் நீடிப்பே யுத்தம் என்பது குறிப்பிட்ட சமுதாயத்தினுள் தோன்றி வளர்ந்து முரண்பாடுகளின் காரணமாகவே யுத்தங்கள் தோன்றுகின்றன. அதாவது குறிப்பிட்ட பொருளாதாய நலனின் போராட்டமே யுத்தமாகும். இந்த லட்சியங்கள் அடையப்படும் போது மட்டுமே யுத்தம் முடிவுக்கு வரும். அந்த லட்சியங்களை அடைவதற்கு முன்பாக ஏதாவது ஒரு காரணத்தால் சமரசம் ஏற்படுமானால் அந்த அடிப்படை முரண்பாடுகள் தீர்க்கப்படாத வரை அந்த சமரசங்கள் முறிக்கப்படுவதும் மீண்டும் யுத்தம் வெடிப்பதும் தவிர்க்க முடியாதது. முரண்பாட்டின் அடிப்படைக் குணாம்சங்கள் மாறும் பொது மட்டுமே யுத்தமானது முடிவுக்குக் கொண்டு வரப்படும். எப்படி யுத்தமானது அடிப்படை முரண்பாடுகளின் வளர்ச்சியால் உருவாக்கப்படுகிறதோ அவ்வாறே சமாதானமும் தனிமனிதர்களின் விருப்பு வெறுப்புக்களால் முரண்பாடுகள் தீர்க்கப்படும் போது மட்டுமே சாத்தியமாகும்.

எமது போராட்டத்தை எடுத்து நோக்கினால் வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், நிலமின்மை, கல்விவாய்ப்பின்மை, மோசமான சுரண்டல், அடக்கு முறைச் சட்டங்கள் இவற்றால் பாதிப்புற்ற சிங்கள மக்களின் போராட்டங்களை இனவாதத்தால் திசை திருப்பி விட்டு தமிழ் மக்களை அழித்தொழிக்க முனைந்துள்ள சிங்கள அரசு ஒருபுறம், அனைத்து அடக்கு முறைகளையும் தாக்கி எறிய தமது சந்ததியின் வருங்காலத்தைக் காக்கப் போராடும் தமிழ் மக்கள் மறுபுறம் சிங்கள மக்களின் போராட்டத்தைத் திசைதிருப்புவதால் மட்டுமே சிங்கள ஆளும் வர்க்கங்கள் தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியும். ஆதலால் சிங்கள இனவாதமானது சிறிலங்கா அரசால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது தவிர்க்கப்பட முடியாதது. இவ்வாறு போராடுவதனால் மட்டுமே தமிழினம் தனது வருங்காலத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

ஆகவே இந்த முரண்பாடு யுத்தத்தினால் மட்டுமே தீர்த்துக் கொள்ளப்பட முடியும். யுத்தத்தில் சிறிலங்கா அரசு தோற்கடிக்கப்பட்டு சுதந்திர சமதர்ம தமிழீழம் அமைக்கப்படுவதால் மட்டுமே தமிழ் மக்கள் இனவாத அழிவிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் காக்கப்படுவார்கள். அதே சமயம் சிங்கள மக்களை சிறிலங்காவில் உள்ள ஆளும் கும்பல் முகம் கொடுக்க நேரிடும். அவர்களது போராட்டம் தென்னிலங்கையில் சிங்கள மக்களது விடுதலைக்கு வழிவகுக்கும்.

நவகாலனித்துவ நாடான இலங்கையில் ஏகாதிபத்தியத்தின் நலன்கள் பாதிக்கப்படாத அளவிற்கு நிலமையை ''சுமூகமாக'' வைத்திருக்க வேண்டிய தேவை சிறிலங்கா அரசிற்கு உள்ளது. அத்துடன் உயர்ந்து வரும் இராணுவச் செலவீனங்களும் ஈடுசெய்ய முடியாதவையாக உள்ளன. இவ்வாறே தமிழ் மக்கள் மத்தியில் உள்ள பாராளுமன்ற முதலாளித்துவ தலைமைகள், இந்தப் போராட்டம் தொடர்ந்து நிகழுமானால் தலைமை தமது கையை விட்டுப் போய்விடும் எனப் பயப்படுகிறனர். அத்துடன் விடுதலை இயக்கங்களைச் சேர்ந்த குட்டி முதலாளித்துவ தலைமைகளின் நீண்ட யுத்தத்தில் நின்று பிடிக்க முடியாத ஊசலாட்டத் தன்மையையும், எந்தக் குறுகிய வழியிலாவது தாம் தாம் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். எனக் கருதும் பதவி வேட்டைத் தன்மைகளுமே இன்றைய சமரசத்தின் சமூக வேர்கள். ஆனால் அடிப்படை முரண்பாடுகள் அப்படியே இருக்கும் வரை இந்த முயற்சிகள் கைகொடுக்க மாட்டாது.

இந்த முரண்பாட்டின் விளைவாகத் தோன்றிய யுத்தம் முரண்பாட்டின் அடிப்படை குணாம்சம் மாறாத வரை முடிவுக்கு வராது. ஏதாவது சில காரணங்களால் ஓர் இடைக்கால சமரசம் ஏற்பட்டாலும், அது தற்காலிகமானதும் நிச்சயமற்றதுமாகும். இந்த முரண்பாடுகள் நிலவும் வரை இந்த சமாதானங்கள் முறிவதும் யுத்தங்கள் திடீர் என வெடிப்பதும் தவிர்க்க முடியாது.

## முடிவுரை

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அரசியற் தன்மை, இப்போராட்டத்தை முன்னெடுக்கும் இராணுவத்திற்கு அரசியலின் தேவை போன்றவற்றின் அடிப்படையில் இன்று எமது போராட்டத்தில் தோன்றியுள்ள அராஜக நிலமைகளையும், தவறான போக்குகளையும் ஒரு விமர்சனக் கண்ணோட்டத்துடன் பார்க்க முனைந்துள்ளோம். எமது போராட்டத்தில் உள்ள அத்தனை தவறான அம்சங்களும் இக்கட்டுரையில் கூறப்பட்டு விட்டதாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அர்த்தமாகாது. இன்னும் பல பிரச்சனைகள் இருக்கத்தான் செய்கிறது. புதிது புதிதாக தோன்றவே செய்கின்றன. ஆனால் அவை கூட இந்த நோக்கில் அணுகும் போது தீர்வு காண முடியாதவை அல்ல.

தமிழீழ விடுதலைப் போராட்டமானது கடினமானதாக, மிக நீண்டதாக அமைவது தவிர்க்கப்பட முடியாது. யாராவது மிக இலகுவாக மிக விரைவில் அடைந்து விடலாம் என்று கூறுகிறார்களே யானால் அவர்கள் கனவு காண்பவர்கள் அல்லது மோசடியாளர்கள் என்பதை இனம் காணத் தவறக் கூடாது. நீண்டதும் கடினமானதும் விடாப்பிடியுமான ஒரு போராட்டத்தின் மூலம் பாரிய தியாகங்களும், அர்ப்பணிப்புகளும் மத்தியிலேயே அந்த இலட்சியத்தை அடைய முடியும். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தோன்றியுள்ள தவறான போக்குகளை களைவது என்பது கூட இலகுவானதல்ல. நீண்டதும் க டி ன ம ா ன து ம ா ன போராட்டத்தினூடாகவே அவை களையப்பட முடியும். அந்த வழியின் ஆரம்ப நடவடிக்கையாக இந்தத் தவறான போக்குகள் பற்றி ஒரு ஆரோக்கியமான விவாதத்தைத் தோற்று விக்க முடியுமாயின் அதுவே இக்கட்டுரையின் பயன் எனக் கருதுகிறோம்.

சரியான கருத்துக்களை உருவாக்குவது என்பது சிரியான பாதைக்கு இட்டுச் செல்லவதன் ஒரு அம்சம் மட்டுமே. ஒருக்கால் சரியான கருத்தொன்று உருவாக்கப்பட்ட பின்பு அக்கருத்துக்களின் அடிப்படையில் தமது தவறான நடைமுறைகளை மாற்றி அமைப்பதென்பது விடுதலை இயக்கத் தலைமைகளின் வர்க்க நலன்களையும் உள்ளடக்கிய ஒரு அம்சமே.

எமது போராட்டத்தில், போராட்ட நடவடிக்கைகளின் அரசியற் தன்மையை மறந்து விட்ட இன்றைய நிலையில் போராட்டத்தின் அரசியற் தன்மை பற்றியும், போராளிகளுக்கும் வெகுனங்களுக்கும் இருக்க வேண்டிய அரசியற் பார்வை பற்றியும் வலியுறுத்துவது அவசியமாகிறது. இப்படிக் கூறிவிடுவதால் போராளிகளின் அரசியற் பார்வையை பெற்று விடுவதால் மாத்திரம் இன்றைய நெருக்கடிகள் அனைத்தும் உடனடியாக தீர்ந்து விடும் என அர்த்தப்படாது.

வரலாற்றில் இதுவரை தோன்றிய வர்க்கங்கள் அனைத்திலும் பாட்டாளி வர்க்கமே புரட்சிகரமானது. சமுதாயத்தில் நிலவும் எந்த ஒடுக்கு முறையும் இந்த வர்க்கத்தை பாதிக்கும் ஆதலால் அனைத்து ஒடுக்கு முறைகளும் ஒடுக்கப்பட்ட சமுதாயமே இதன் இலட்சியமாகும். ஏனைய வர்க்கங்கள் (முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ வர்க்கங்கள்) பாட்டாளி வர்க்கத்தை விட மேல்தட்டுகளில் இருப்பதால் அவை தமக்கு மேல் இழைக்கப்படும் ஒடுக்கு முறைகளுக்கு எதிராக போராடும் அதே சமயம் தாம் தமக்குக் கீழ் உள்ள வர்க்கங்கள் மீது ஒடுக்கு முறையைக் கட்டவிழ்த்து விடவும் தயங்கவில்லை. ஏனெனில் இவ் ஒடுக்குமுறைகள் மூலம் இவ்வர்க்கங்கள் இலாபம் அடைகின்றன. ஆகவே பாட்டாளி வர்க்க சித்தாந்தம் மட்டுமே சகல அடக்கு முறைகளையும் தகர்க்க வல்லது.

போராளிகள் அரசியல் பார்வை பொறுதல் எனும் போது அப்போரளிகளும், விடுதலை இயக்கங்களும் எந்த அரசிலை சவீகரித்துக் கொள்கின்றனர் என்பதையும் பொறுத்தே இன்றைய நெருக்கடிகளின் தீர்வு அமைந்திருக்கும்.

தமிழீழப் போராட்டமானது ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகும் இதில் பல்வேறு வர்க்கங்கள் ஈடுபடுகின்றன. அத்துடன் விடுதலை இயக்கங்களில் உள்ள பலர் இளைஞர்களாகவும், நேரடியான உற்பத்தி உறவுகள் எதனையும் கொண்டிருக்காமையாலும் போராளிகளின் வர்க்கப் பின்னணிகளையும், இன்று இயக்கங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளின் வர்க்க முரண்பாட்டின் அம்சங்கள் பொதிந்திருப்பதையும் இனங்காண்பதில் சில சிரமங்கள் இருக்கின்றன.

இவற்றை இனங்காண்பதில் கஸ்டங்கள் இருக்கின்றன என்பதற்காக இப்போராட்டத்தினுள் வர்க்க முரண்பாடு அம்சங்களோ, சமூகத்தில் நிகழும் வர்க்கப் போராட்டத்தின் பிரதிபலிப்பாக விடுதலை இயக்கங்களினுள் வர்க்க நலனின் மோதல்களே இல்லை என அர்த்தப்பட மாட்டாது.

விடுதலை இயக்கங்களில் உள்ளோரின் சமூகக் கண்ணோட்டமானது அவர்களது வர்க்க நிலையைக் காட்டி நிற்கிறது. குறிப்பிட்ட ஒரு விடுதலை இயக்கத்திலுள்ள போராளிகளின் வேறுபட்ட சமூகக் கண்ணோட்டங்கள் முட்டி மோதுகின்றன. இவை புற உலகில் நிகளும் வர்க்கப் போராட்டங்களின் பிரதி பலிப்புக்களே. விடுதலை இயக்கத்தினுள் பாட்டாளி வர்க்க விரோதக் கண்ணோட்டமானது தலைமை வழிபாடு, பதவிவேட்டை, அராஜகம், ஜனநாயக மறுப்பு, அதிகாரத்துவம், சர்வாதிகாரம், துரோகத் தனம், சந்தர்ப்ப வாதம், சமரசவாதம், இன்ப நாட்டவாதம், சித்திரவதைகள், படுகொலைகள் என ர்வதேச ரீதியில் வெற் தன்னை வெளிப்படுத்துகிறது. இதற்கு மாறாக பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டமானது அரசியலினூடாக பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல், உருக்குப் போன்ற கட்டுப்பாடு, எளிமை, தியாகத்திற்கு அஞ்சாமை, சமரசம் செய்யாத போர்க்குணாம்சம், விமர்சனம் – சுயவிமர்சனம், உட்கட்சிப் போராட்டம் மூலம் தொடர்ச்சியாக தாபனத்தை தவறில் இருந்து மீட்டெடுத்தல் போன்ற நடவடிக்கைகளின் ஊடாக வெளிப்படுகிறது இம் முரண்பாட்டுப் போக்குகள் தாபனத்தினுள் அடிக்கடி முட்டி மோதிக் கொள்கின்றன. இம் முரண்பட்ட போக்குகள் நீக்கப்பட்டு பாட்டாளி வர்க்கக் குணாம்சங்களை விடுதலைப் போராளிகள் சுவீகரித்துக் கொள்ளம் போது மட்டுமே இவ்வியக்கங்களாக மாறும்.

தமிழீழத்தில் இதுவரை ஒரு முழுமையான சமூக ஆய்வு மேற்கொள்ளப்படாதது வருந்தத் தக்க விடையமாகும். இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்ட சூழலில் தமிழ் சமூகத்திக் வர்க்கத் தன்மைகள் ஆகியவற்றின் புரட்சிகர, எதிர் பரட்சிகர அம்சங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரின் வர்க்கக் குணாம்சங்கள், போராட்டத்தில் அதன் பாதிப்புகள் போன்றவை இன்னும் ஆழமான ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய விடயங்களாகும். ஆனால் எமது போராட்டத்தின் அரசியற் தன்மை, போராட்டம் அரசியற் க ண் ே ணா ட ் ட த் து ட ே ன ே ய முன்னெடுக்கப் பட வேண்டியதன் அவசியம் ஆகியவற்றை வலியுறுத்துவது மேற்கூறப்பட்டவை எல்லாவற்றிற்கும் முன் நிபந்தனையாகிறது. அந்த நோக்கத்திலேய இக்கட்டுரை வரையப்பட்டது. அத்துடன் இக்கட்டுரை சென்றடைய வேண்டிய வெகுஜனங்களின் கருத்தியல் மட்டங்களையும், அவர்கள் முன் அவசரமாக நிலைநாட்டப்பட வேண்டிய விடையங்களையும் கருத்திற் கொண்டே இதனைப் படைத்துள்ளோம். இன்னும் அழமாக ஆராயப் படவேண்டிய, விரித்து கூறவேண்டிய பல விடயங்கள் இருக்கவே செய்கின்றன. அவற்றை வருங்காலத்தில் முன்வைப்போம்.

முற்றும்.

www.tamilarangam.net



இக்கட்டுரையானது சமூகத்தின் பல அம்சங்களை வெளிச்சத்திற்கு கொண்டு வர முயற்கிக்கின்றது. இதன் அவசியம் கருதியே இங்கு பிரசுமாகின்றது. கடந்த கால ஆய்வுகள் தொடாதவற்றை இது அலசிப்பார்க்க முற்படுகின்றது. (இதில் ஆராயப்படுபவைகளின் இன்னொரு பக்கத்தை அரசியலும் ராணுவமும் என்ற பகுதியில் பார்க்கப்படுகின்றது.) அதாவது சமாதானம் என்றால் என்ன, இனங்களுக்கிடையே, சமூகங்களுக்கினடையே வர்க்கங்களுக்கு இடையே இப்படியே அடுக்கிக் கொண்டே போகலாம். கடந்த கால ஆய்வானது மனித சமுதாயத்தின் மேற்கட்டுமானத்தில் என்ன நிகழ்கின்றது என்பது பற்றியும் அதன் தாக்கங்களை மாத்திரம் அலசிப்பார்க்கும் பார்வை இருந்து அந்த மரபை முறித்துக் கொண்டு புதிய பாதையை நோக்கி வழிநடைபோட எடுக்கும் முயற்சிக்கு எம்முடைய சகல ஒத்துழைப்புக்களையும் கொடுக்க வேண்டியது கடமையாகும். எப்பொழுதும் அடிமட்டத்திற்கு சென்றே விவாத்தை ஆய்வை மேற் கொள்ளவேண்டும்.

சுமைகள்.

# பூமிக்கு எல்லை போட்டது யார்?

உலக சமாதனம், ஜனநாயகம், சுபீட்சம் என பலதரப்பட்ட கோரிக்கைகள், கோசங்களை நாள் தோறும் சந்திக்கிறோம். அரசுகள், மதபீடங்கள், அரசு சார்பாக இயங்கும் மனித உரிமை அமைப்புகள், அரசு சார்பாக இயங்கும் சமூக நலக் குழுக்கள் என எண்ணற்ற பிரிவுகளால் இப்படிப் பேசப்படுகின்றன.

உலக சமாதனத்திற்கு யார் தடை என ஆராயின் யார் இதைச் சொல்கிறார்களோ அவர்களே ஒழிய வேறு யாரும் அல்ல. உலகில் யுத்தங்கள் ஏன் ஏற்படுகின்றன. நாட்டுக்கு நாடு, உள் நாட்டு யுத்தங்கள் என ஏன் ஏற்படுகின்றன. எல்லாவற்றிற்கும் அடிப்படைக் காரணம், மனிதனின் தேவைகள் சமமாகப் பங்கிடப்படாமையே ஒழிய வேறு ஒன்றுமே அல்ல. இப்படிக் கூறும் போது இது ஒரு மாயை போல் தோன்றும். ஆனால் இதை ஆராயின் உண்மை புரியும்.

உலகம் இன்று இரண்டு பெரும் பிரிவாகப் பிரிந்துள்ளது. ஒன்று பரம ஏழை மேலும் ஏழையாக, மற்றையது பணக்காரன் மேலும் பணக்காரனாக நடுநிலைப் பிரிவு இவற்றில் ஒன்றை நோக்கிச் செல்கின்றது. இன்று இந்நிலையை ஏற்படுத்துபவன் பணக்காரனே ஒழிய வேறுயாரும் இல்லை. இன்றைய உலகின் சமாதனத்திற்கு ஆப்பு வைப்பவன் பணக்காரனே ஒழிய வேறுயாரும் அல்ல. தற்போது சமாதானம் கெட்டுப் போய் உள்ளதே என்று அழுவது போல் நடிப்பவனும் இவனே தான்.

உலகம் தோன்றிய பொழுதும், மனிதன் உருவான போதும் இந்த உலகில் உள்ள அனைத்துப் பொருட்களும் பொதுவாகவே இருந்தது. உலகில் உள்ள எல்லாச் செல்வமும் பொதுவாக மக்கள் கூட்டத்திற்கு பொதுவாக இருந்ததே ஒழிய, தனிநபர் சொத்தாக என்றும் இருந்ததில்லை. மக்கள் கூட்டத்தின் முன்னிருந்த சொத்து எப்படி தனிமனித சொத்தாக மாறியது? பூமிக்கு எல்லை போட்டு இது உன்னுடையது, இது என்னுடையது என ஏற்பட்டது எப்படி? எப்படி சிலரிடம் சொத்துக் குவிந்தன? இவையே மனித சமுதாயத்தின் அவலத்திற்கு அடிப்படையாகும்.

இங்கு திறமையோ, வீரமோ, வல்லமையோ அல்ல மாறாக மனிதனை, அவனின் உழைப்பை அபகரிப்பதன் விளைவே சொத்துக்கள் இன்று தனிமனிதனுக்கு சொந்தமாகக் காரணமாகின்றது. இன்று உலகில் உள்ள எந்தப் பொருளை எடுப்பினும் அவை இயற்கையில் இருந்து எடுத்த பொருட்களின் தொகுதியே ஒழிய வேறொன்றும் அல்ல. இயற்கையில் இருந்து எடுத்த பொருட்களின் மீது மனிதனின் உழைப்பு (செயற்பாடு) பொருட்களை மீட்டெடுக்க வழிகோலியது. உழைப்பு இல்லாது எந்தப் பொருளையும் மனிதன் பெற முடியாது.

இந்த உழைப்பின் பாத்திரம் தான் பின்னால் ஏமாற்றப் பட்டு அதிக உழைப்பை யார் ஒருவன் கூடுதலாக ஏமாற்ற முடிந்ததோ அவன் தான் பொதுச் சொத்தை தனதாக்க முடிந்தது. இது தான் உலக அவலத்திற்கு அடிப்படையாகும்.

இயற்கையில் எல்லாப் பொருளும் உண்மையில் அதன் பெறுமதி பூச்சியமே ஒழிய், தனியாக அதற்கு பெறுமதி இருப்பதென்பது மனிதனை ஏமாற்றுவதாகும். ஏனெனில் எல்லாப் பொருட்களும் பெறுமதி அற்ற இயற்கையின் விளைவே ஆகும். இயற்கையில் எடுக்கும் எல்லாப் பெறுமதி அற்ற பொருட்களின் மீது ஏற்படுத்தும் மாறுதல் மனித உழைப்பு மூலம் நகர்த்தப்படுகின்றது.

மனித உழைப்புத்தான் அப்பொருளை மனிதனின் பயன்பாட்டிற்கு இயற்கையில் இருந்து மாற்றி அமைக்கிறது. இந்த பயன்பாட்டுப் பொருட்களின் மீதான உழைப்பு சக்திதான் ஒவ்வொரு பொருட்களுக்கும் வேறுபடுகிறதே ஒழிய அப்பொருட்களின் பெறுமானம் எப்போதும் பூச்சியம் தான். எல்லோரும் உழைப்பார்களாயின் உழைப்பின் பயன்பாடு பூச்சியமானது. இயற்கையில் இருந்து சேகரிக்கும் பொருட்களின் பெறுமானம் பூச்சியமாகவும் உள்ளது. எனவே உற்பத்தியின் பின் பொருட்களின் விலையும் பூச்சியமாகின்றது.

இதை இன்று உலகை ஆளும் பிரிவு சுயநலத்துடன் மறுக்கின்றது. இது மற்றவனை ஏமாற்றி அவனின் உழைப்பைக் கொள்ளையிட உழைக்க விரும்பாத பிரிவு செய்யும் சதியாகவும் உள்ளது. இது தான் மூளை உழைப்பை உழையாத பிரிவுக்கு அடுத்த தட்டில் கொண்டு வருவதன் மூலம் இந்திய சாதிக் கட்டமைவுபோல் உடல் உழைப்பில் ஈடுபடுபவனையும், மூளை உழைப்பில் ஈடுபடுபவனையும் மோதவிடுகின்றது.

இன்று உடல் உழைப்பில் ஈடுபட மறுப்பின், அல்லது அது நின்று போயின் உலகத்தில் எந்தப் பொருளையும் பெற முடியாது போய்விடும். முளை உழைப்பு உடல் உழைப்பைச் சார்ந்தே உள்ளது. இருந்து போதும் இன்று மூளை உழைப்பு உடல் உழைப்பைவிட முன்னுக்கு உள்ளது எனின் அது உடல் உழைப்பில் ஈடுபடுபவரின் உழைப்பை சுரண்டி மறைக்க செய்யும் சதியாகவே உள்ளது.

உலகில் அமைதி என்பது பெறுமதியற்ற இயற்கையின் பொருள் மீதான, எல்லா மனிதனின் உழைப்பையும் பயன் படுத்திக் கிடைக்கும் பெறுமதியற்ற பொருளை தேவையுடன் பயன் படுத்தும் உலகம் தோன்றும் போது தான் உண்மையில் சமாதானம் உருவாகும்.

இல்லாத வரை மக்கள் தமக்குள் மோதுவது தவிர்க்க முடியாத நிகழ்வாக உள்ளது. இதை ஆதார பூர்வமாகப் பார்ப்போமாயின் மதங்கள் கூறுகின்றன ஆண்டவன் செல்வத்தைக் கொடுக்கிறான். எனவே ஆண்டவனை வணங்குங்கள் என்கின்றன. ஆண்டவனே பூமியையும் அதன் செல்வத்தையும் படைத்ததாகக் கூறும் மதங்கள் அந்த சொத்து தனிமனிதனுடையதாக எந்த ஆண்டவன் எப்போது ஏற்படுத்தினான் என விளக்குவது இல்லை. ஆனால் ஆண்டவன் படைத்த சொத்தை வழிபாட்டு மூலம் தனிமனித சொத்துக்கு சூறையாட முடியும் என கூறுத்

www.tamilarangam.net



தவறுவதில்லை. இது எந்த மதத்திற்கும் விதிவிலக்கல்ல. வழிபடுங்கள் எல்லாம் கிடைக்கும் எனக் கூறி ஏமாற்றும் மதம், நாட்டுக்கு நாடு உள்ள ஏற்றத் தாழ்வை விளக்குவதில்லை. ஆண்டவன் நாட்டுக்கு நாடு ஏற்றத் தாழ்வைத் தந்துள்ளதாக அல்லவா அர்த்தப்படும். இதுபோல் உள்ள பல ஏமாற்றங்களைக் காண முடியும்.

மறுபுறம் படித்தவனுக்கு, அவன் மூளை உழைப்பிற்கும் உயர் சம்பளம். உடல் உழைப்பில் ஈடுபடுபவனுக்கு குறைந்து சம்பளம். இதை நியாயப்படுத்தும் உலகம் இரண்டு பேரின் உழைப்பின் சமபாட்டை மறுக்கின்றது. மனித தேவையை மறுக்கும் ஜனநாயக விரோதியாக உள்ளனர். ஆணுக்கு உயர் சம்பளத்தைக் கொடுக்கவும், பெண்ணுக்கு குறைந்து கூலியைக் கொடுக்கும் உலகம் சம உழைப்பை மறுக்கும், சம தேவையை புறக்கணிக்கும் ஜனநாயக விரோதத்திற்குள் மூள்கின்றது.

வெள்ளையனை விட கறுப்பன் தாழ்ந்தவன் என்ற கோட்பாடும் பணக்கார நாட்டுக்கும் மூன்றாம் உலக ஏழை நாட்டுக்கும் இடையில் உள்ள தேவை, சம உழைப்பை மறுக்கும் ஜனநாயக விரோதக் கட்டமைவை நியாயப்படுத்துகின்றது.

உலக அமைதி இன்மைக்கு இவைதான் காரணம் என்பதை இனி நாம் சொல்ல வேண்டியிருக்காது. இனி நாம் இதை விரிவாகப் பார்ப்போம்.

1995ம் ஆண்டு உலகம் உற்பத்தி செய்த மொத்த செல்வத்தின் பெறுமதி 28,05,619 கோடி டொலராகும். இதை உலகில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனுக்கும் பிரித்தால் 5010 டொலர்கள் ஆகும். ஆனால் உலகில் உள்ள அமெரிக்க, யப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து, இத்தாலி போன்ற ஏழு நாடுகளும் (G7) பெற்றுக் கொண்டது 18,66,730 கோடி டெலராகும். அதாவது 66.53 வீதமாகும். ஏன் எல்லா மேற்கு நாடுகளும் பெற்றுக் கொண்டது 21,81,891 கோடி டொலர்களாகும் இது 77.76 வீதமாகும்.

மிகுதியைத்தான் மிகுதி நாடுகள் தமக்குள் பகிர்ந்து கொண்டதுடன் உலகில் 20 வீதமான பரம ஏழை மக்கள் வெறும் 1 வீதத்தை மட்டும் தமதாக கொண்டு தொடர்ந்தும் தாழ்த்தப்பட்ட நிலையில் மிகப்பரம ஏழையாக உள்ளனர். அதாவது உலகில் 20 வீதமான பணக்காரர்களும், பணக்கார நாடுகளும் உலக செல்வத்தில் 80 வீதத்தை அனுபவிக்க, இன்னுமொரு 20வீதமான மக்கள் 1 வீதத்தை அனுபவிக்க மிகுதி 60 வீதமான மக்கள் 19 வீத செல்வத்தை அனுபவிக்கின்றனர்.

இது தான் உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக உள்ள விடையமாகும். இது எப்படி சாத்தியமாகின்றது. உலக செல்வம் பகிரப்படல் என்பது ஒரு சூதாட்டமாகவே நடக்கின்றது. ஏழை நாட்டின் பொருள்களின் விலையைத் தீர்மானிப்பது பணக்கார நாடாக உள்ள அதே நேரம் பணக்கார நாட்டின் பொருள்களின் விலையைத் தீர்மானிப்பது பணக்கார நாடாகவே உள்ளது. ஒரு ஏழை நாடு எதை உற்பத்தி செய்வது என்பதைக் கூட தீர்மானிப்பது பணக்கார நாடுகளே ஒழிய வேறு யாரும் அல்ல. அதாவது உலக உற்பத்தி, வர்த்தகம் என்பன பணக்கார நாடுகளுக்கு சமமாக வறிய நாடுகள் உள்ள அதேநேரம், இதற்கான உலக சட்டங்களை பணக்கார நாடுகளும், பணக்காரனும் தனக்கு சாதகமாக உருவாக்கி வைத்துள்ளது.

உலகில் இதை மீறாத வகையில் உள்நாட்டு சந்தையைக் கட்டுப்படுத்தி அதன் வரவு செலவைக் கட்டுப்படுத்துவதன் மூலம் அவனைக் கடன் வாங்க நிர்ப்பந்தித்துள்ளது இந்த பணக்கார நாடுகள். இந்த உலகக் கடன் 1995 இல் 148900 கோடி டொலராக உள்ளது. இது உலக வருட தேசிய வருவாயில் பதினெட்டுக்கு ஒன்றாகும். இக்கடன் மூன்றாம் உலக நாடுநாடுகளின் மேல் உள்ள சுமையாகும் இந்தக் கடன் மூன்றாம் உலக வருமானத்தில் நாலில் ஒன்றாகும். இதற்கு வட்டியாகவே ஒரு பெருந் தொகை வருடா வருடம் இந்த நாடுகளுக்கு இந்தத் தேசிய வருவாயில் கொடுக்கும் அதே நேரம் புதிய கடனை நிர்ப்பந்தப் படுத்தி கொடுக்கின்றன இந்த பணக்கார நாடுகள். இதுதான் உலக அமைதிக்கு சவாலாக இருக்கின்றது. இதை விளக்கிக் கூறுன் ஊரில் உள்ள ஒரு பணக்காரன் ஊரில் உள்ள ஏழைகளுக்கு கடன் கொடுத்த பின் அதற்கு வட்டியையும் முதலையும் கெடுக்கும் போது அதை கொடுக்க வசதியற்ற அந்த ஏழைகளின் சொத்தை எழுதி வாங்கி பின்னர் அவர்களையே கொத்தடிமைகளாக்கும் நடைமுறையில் இருப்பது போன்றுதான் இன்று உலகம் உள்ளது.

இதற்கு எதிரான கலகம் தான் உலக அமைதியைக் கெடுக்கின்றது எனக் கூச்சல் எழுப்பும் பணக்காரன், மறுபுறம் உலக அமைதிக்கு சவால் விடுபவனாக உள்ளான். உலகம் இன்று ஒற்றைப் பொருளாதார அலகுக்குள் செல்கிறது. அதாவது விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் உலக செல்வத்தை அபகரித்தல் இன்று அதிகரிக்கின்றது. சிறு மீனை பெரிய மீன் விழுங்கும் தொடர் நிகழ்ச்சிப் போக்கு போல சிறு முதலாளி முதல் பெரிய முதலாளிவரை விழுங்கல் தொடர்கின்றது. இது உலகில் சில பணக்கார ரவுடிக் கும்பலை உருவாக்குவதுடன் அவர்கள் ஆட்சியை உலகில் நிலைநிறுத்துகின்றது. இன்று உலகப் பணக்காரரை எடுப்பின் உலகில் மிகப் பெரிய பணக்காரனின் சொத்து 1800 கோடி டொலராகும். உலகில் உள்ள முதல் பத்துப் பணக்காரர்களின் சொத்து 11320 கோடி டொலராகும். பிரான்சின் முதல் 100 பணக்காரர்களின் சொத்து 7672 கோடி டொலராகும். பிரான்சின் முதல் 435 பணக்காரர்களின் சொத்து 9987 கோடி டொலராகும். பிரான்சின் 435வது பணக்காரனின் சொத்து 2 கோடி டொலராகும்.

உலகில் உள்ள நாடுகளை எடுப்பின் முதல் உலக 10 பணக்காரனின் சொத்தை விட கூடுதலாக வருட தேசிய வருவாயைப் பெற்ற நாடுகள் 64 மட்டுமே.162 நாடுகள் அதில் உள்ள மக்களின் வருட தேசிய வருமானம் இந்த 10 பணக்காரனைவிடக் குறைவாகும். பிரான்சில் உள்ள முதல் 435 பணக்காரர்களை விட 30 நாடுகள் மட்டுமே வருடவருமானமாக இவர்களை விட அதிகமாகப் பெறுகின்றன. மிகுதி 196 நாடுகளும் இவர்களை விடக் குறைவாகவே உள்ளது.

அதாவது உலகில் உள்ள முதல் பணக்காரன் சைரிஸ்சின் சராசரி வருமானத்தைவிட 15 கோடி மடங்கால் பணக்காரனாக உள்ளான். இது தான் உலக அமைதிக்கு சவலாகின்றது. உலகில் உள்ள சிலர் உலகில் உள்ள எல்லா மக்களின் சொத்தையும், உழைப்பையும் வைத்திருப்பதை நியாயப் படுத்தும் ஜனநாயகம், கடவுள் வழிபாடு, உலக அமைதி, என்பன ஏமாற்றமும் கபடமும் நிறைந்ததே.

இன்னுமொரு புறம் உலக வறுமைக்குக் காரணம் மூன்றாம் உலக மக்களின் அதிகரிப்பு எனக் கூறவும், அதை கிளிப்பிள்ளை போல் செல்லவும் நாம் தயங்குவதில்லை. ஆனால் இதுபொய்மை நிறைந்து தமது கொள்ளையை மறைக்க பயன்படுத்தும் வாதங்களே.

இன்று உலகில் உணவுத் தட்டுப்பாடு உண்மையில் உள்ளதா? என்பதை ஆராய்வோமாயின் உலக மா உற்பத்தியை எடுப்பின் 53,76,81,000 மெற்றிக் தொன் 1995 இல் உற்பத்தி செய்யப்பட்டது. இது ஒரு நபருக்கு 96 கிலோப்படியாக உற்பத்தியானது. கோப்பி உற்பத்தி 9 கிலோவாக உற்பத்தியானது. 4

2ம் பக்கம் பார்க்க